பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 7 திங்கட்கிழமை (23-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:300

# கைதிகள் பரிமாற்றம் 28 ஆம் திகதியன்று!

## ஓமந்தையில் வைத்து நடக்கும்

வவுனியா,செப்.23

கடற்படைக் கப்டன் அஜித் போயா கொட உட்பட ஏழு படையினர் எதிர் வரும் 28 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்படுவர். இதற்குப் பதிலாக அரசாங்கம் 13 தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும்.

இக்கைதிகள் பரிமாற்றம் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் முன்னிலையில் ஓமந்தையில் இடம்பெறும். இப் பரிமாற்றம் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறுமென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.

கைதிகள் பரிமாற்றத்திற்கு இரு தரப்பினரும் ஏற்கனவே இணங்கி யிருந்த போதிலும் பல்வேறு நடை முறை மற்றும் சட்டச் சிக்கல்களினால் அது தாமதமடைந்து வந்தது.

எனினும் இக்கைதிகள் பரிமாற் றம் எதிர்வரும் 28 ஆம் திகதி நிச்ச யமாக நடைபெறும் என்று புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை செய்யப்பட வேண்டிய 23 தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்களை அரசுக்கு புலிகள் சமர்ப் பித்திருந்தபோதிலும் அவர்களில் 10 பேரை வழக்குகள் காரணமாக விடு விக்க முடியாதநிலை இருந்து வருவ தாக அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# புத்தளம்—வன்னி வீதியை திறப்பது குறித்து யோசனை

## யாழ். - கண்டி வீதியும் 24மணிநேரமும் திறந்திருக்கும்

கொழும்பு,செப்ரெம்பர்23

**புத்தளத்தையும் வன்னியையும் இணைக்கும் 'ஏ-5' வீதியை மீண்டும் திறந்துவிடுவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.**

**15 ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடக்கும் இந்த வீதியைத் திறப்பது பற்றி புலிகளோடு பேச்சுக்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

புத்தளம் - வன்னிப்பாதை திறக் கும் விடயம் புரிந்துணர்வு உடன்படிக் கைக்குள் உள்ளடக்கப்படவில்லை. பயன்படுத்தப்படாமல் உள்ளதால் இந்த வீதி மோசமாக பாதிக்கப்பட்டுள் ளது. இந்தப் பாதையைத் திருத்தி வழமையான போக்குவரத்துக்குத் திறந்துவிட நடவடிக்கைகள் எடுக் கப்படவுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்றின் பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ்.-கண்டி வீதியை 24மணித்தியாலமும் திறந்து விட அரசும் புலிகளும் இணங்கியுள் ளனர்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே இதுவரைகாலமும் நிலவி வந்த அவ நம்பிக்கை தற்போதைய சமாதான நட வடிக்கைகள் காரணமாக நீங்கிவிட் டது. எனவே, பாதுகாப்புப் படையி னர் வடக்கிலும் கிழக்கிலும் புலிகளு டன் அந்நியோன்னியமாக நடந்து வரு கின்றனர். இது வரவேற்கத்தக்க விட யம் என அவர் மேலும் கூறினார்.

# திலீபனின் ஊர்திப் பவனி இன்று தீவகம் செல்லும்

தியாகதீபம் லெப்.கேணல் திலீப னின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி நேற்றுக்காலை 7 மணியளவில் கொடிகாமத்தில் இருந்து புறப்பட்டு நேற்று மாலை யாழ்நகரை வந்தடைந் தது.

கொடிகாமத்திலிருந்து நேற்றுக் காலை ஆரம்பமான ஊர்திப்பவனி மிருசுவில், வரணி, வேம்பிராய் சந்தி, புத்தூர் சந்தி, சாவகச்சேரி, கைதடிச் சந்தி, நாவற்குழி ஆகிய பகுதிகள் ஊடாக வந்து யாழ்நகரை அடைந் தது.

இன்று தீவகப்பகுதியிலும் நாளை யாழ்நகரப் பகுதியிலும் ஊர்திப் பவனி இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்!

## 15 பேரடங்கிய கும்பல் அவரது வீட்டில் அட்டகாசம்!!

வடமராட்சி,செப்.23

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம்.ஸ்ரீபதி கடந்த சனிக்கிழமை இரவு அவரது வீட்டிலிருந்து இனந் தெரியாத கும்பல் ஒன்றினால் கடத் திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக் கப்பட்டிருக்கிறார். பலத்த உள்காயங் களுக்கு இலக்கான அவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

பருத்தித்துறை பத்திரகாளி அம் மன் கோயில் பகுதியில் உள்ள அவ ரது வீட்டுக்கு இரவு 11 மணியளவில சென்ற - சுமார் 15 பேரடங்கிய - கும்பல் ஒன்றே அவரது வீட்டில் அட் டகாசம் புரிந்ததுடன் அவரைக் கடத் திச் சென்று தாக்கியதாகவும் கூறப்படு கிறது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவ தாவது :-

இரவுவேளை, மோட்டார் சைக் கிள்களிலும் வானிலும் அதிபர் ஸ்ரீபதி யின் வீட்டுக்குச் சென்ற கும்பல் ஒன்று அவரை வெளியே வருமாறு அழைத் தது. அழைப்புக் குரல் கேட்டு அவர் வெளியே வந்தார். வாயிலில் வைத்து அவரை வெளியே இழுத்துச் சென்ற அவர்கள், அவரை பலமாகத் தாக்கத் தொடங்கினர். தடிகள், பொல்லுகள்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# கல்வி மேம்பாட்டுப் பேரவை நேற்று மீண்டும் அங்குரார்ப்பணம்

## புதிய தலைவராக பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம்,செப்.23

கடந்த சுமார் 6 வருடங்களின் பின்னர் யாழ்மாவட்ட கல்விப் பேரவை நேற்று மீண்டும் அமைக்கப்பட்டது. அதன் தலைவராக யாழ்.பல்கலைக் கழக தமிழ்த் துறைத்தலைவர் பேரா சிரியர் அ.சண்முகதாஸ் தெரிவு செய யப்பட்டார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேர வையின் மாநாடு ஒன்று நேற்று யாழ். கல்வி வலயத்தில் கூட்டப்பட்டது. தமி ழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் தலைவர் வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் யாழ்.மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்(பேபி), யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன், நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.சிவாஜி லிங்கம் மற்றும் கல்விப் பணிப்பாளர் கள், அதிபர்கள், ஆசிரியர்கள் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள், மாண வர் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிதாக அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை யின் துணைத்தலைவராக சென்.பற் றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண.பிதா ஏ.ஜ.பேணாட் அடிகளாரும், செயலாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதனும், துணைச் செயலாளராக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.கைலை

(14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

நேற்று நடைபெற்ற கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அங்கு ரார்ப்பண மாநாடு சம்பந்தமான விரிவான படங்கள் 3 ஆம் பக்கத் திலும், செய்திகள் 16 ஆம் பக்கத் திலும் பார்க்கலாம்.



ஐ.நா.கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக அமெரிக்கா சென்ற ரணில் விக்கிரமசிங்க அங்கு அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின் டனை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு அமெரிக்கா தலைமை

கொழும்பு,செப்.23

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் விசேட மாநாட்டுக்குத் தலைமை வகிப்பதற்கு அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்க பிரதி இரா ஜாங்க அமைச்சர் ஆமிரேஜை சந்தித்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்கு பிந்திய சூழலில் செயற்படும் வகையில்

# இராணுவத்தை மறுசீரமைப்பதில் அரசு கவனம் என்கிறார் பிரதமர்

கொழும்பு,செப்.23

யுத்தத்திற்குப் பிந்திய சூழலில் திறம்படச் செயற்படக்கூடிய வகை யில் இலங்கை இராணுவத்தை, மறு சீரமைத்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியில் இலங்கைப் படையினரை கூட்டுத் தலைமையகம் ஒன்றின் கீழ் கொண்டுவர உள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை வரலாற்றில் முதற்தட வையாக முழுமையான பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அவர் ஆயுதப் படையினரை, மறுசீரமைப்புச் செய்வதில் கூடிய கவனம் செலுத்து கின்றார். எந்த நிலைமையும் சமாளிக் கும் வகையில் இராணுவம் இருக்க வேண்டும். யுத்தம் முடிந்த பின்னா ரான நிலைக்காக இராணுவத்தை மறு சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

இது தொடர்பான ஆலோசனை களை உலக நாடுகள் வழங்கியுள் ளன. இலங்கைப் படைகளைப் பொறுத் தவரையில் கூட்டுத் தலைமையொன்று தற்போது அவசியமாகவுள்ளது. அமெ ரிக்காவில் உள்ளது போன்று, கூட்டுத் தலைமை ஒன்றை ஏற்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு ஒன்று பரிசீலனை செய்துள்ளது.

இந்த அறிக்கை எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை நான் ஜனா திபதிக்கும் அனுப்பி வைத்துள்ளேன் - என்றார். (ம)

# நிரந்தர சமாதானத்துக்கான நம்பிக்கை சமாதானப் பேச்சால் துளிர்த்துள்ளது

## மல்வத்தை பீடாதிபதி ஸ்ரீவிபஸ்ஸி கூறுகிறார்

அரசுக்கும் புலிகள் இயக்கத்துக் கும் இடையிலான சமாதானப் பேச் சுக்கள் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத் தியிருக்கின்றன என்று மல்வத்தை பீடாதிபதி ரிப்பட்டுவெல்லே ஸ்ரீ விபஸ்ஸி மகாநாயக்க தேரர் கூறுகிறார்.

உள்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், பதில் பிரதி ஆணையாளர் ஆகியோர் மகாநாயக்க ரைச் சென்று சந்தித்தபொழுதே அவர் இதனைக் கூறியிருக்கிறார்.

பொறுப்புவாய்ந்த பலர் முன்னர் போரை ஒரு தொழிலாகவே செய்து வந்தனர். போரை முடித்துவைக்கும் அவசியம் ஒருவருக்கும் இருக்க வில்லை. போரை முடித்துவைக்கும் துணிவு அமரர் டென்சில் கொப்பேக டுவைக்கே இருந்தது.

எவ்வாறாயினும், இவ்வேளையில் அனைவரும் சகிப்புத்தன்மையுடன் செயலாற்றவேண்டும்.

இவ்வாறு மல்வத்தை பீடாதிபதி மேலும் கூறியிருக்கிறார். (ம)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

**உலகக் கிண்ண மெய்வன்மைப் போட்டிகள்:**

## 100 மீற்றரில் சுசந்திகா மூன்றாமிடம்! 200 மீற்றரில் நூலிழையில் தோல்வி!!

உலகக் கிண்ண மெய்வன்மைப் போட்டிகளில் இலங்கை வீராங்கனை சுசந்திகா 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாமிடம் பெற்றார்.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் செப்ரெம்பர் 20,21 ஆம் திகதிகளில் உலகக் கிண்ண மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்றன. ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஓஷானியா, ஸ்பெயின், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஜேர்மனி, ரஷ்யா ஆகியன இப்போட்டிகளில் பங்குபற்றின.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி வெள்ளியன்று நடந்தது.

இதில் அஜநா. வீராங்கனை மேரியன் ஜோன்ஸ் 10.90 செக்கன்களில் ஓடி முதலிடம் பெற்றார். ஜமைக்கா வீராங்கனை 11.06 செக்கன்களில் இரண்டாமிடத்தையும், சுசந்திகா ஜயசிங்க 11.20 செக்கன்களில் மூன்றாமிடத்தையும் பெற்றார்.

பெண்களுக்கான 200மீற்றர் ஓட்டத்தில் மூன்றாமிடம் பெறும் வாய்ப்பை நூலிழையில் தவறவிட்டார் சுசந்திகா. பஹாமஸ் வீராங்கனை டெபி பேர்குசன் 22.49 செக்கன்களில் ஓடி சாம்பியனானார். பிரான்சு வீராங்கனை முரேல் ஷார்ட்மன் 22.78 செக்கன்களில் இரண்டாமிடத்தையும் கெமரூன் வீராங்கனை மரியும் லியோனி 22.81 செக்கன்களில் ஓடி மூன்றாமிடத்தையும் பெற்றனர். சுசந்திகா ஜயசிங்க 22.82 செக்கன்களில் நான்காமிடத்தையே பெற்றார்.

இலங்கைப் போட்டியாளர்கள் பங்குபற்றிய மற்றொரு போட்டியான ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஆசிய அணி நான்காமிடத்தையே பெற்றது. அமெரிக்காஸ் அணி 2 நிமிடம் 59.19 செக்கன்களில் முதலிடத்தையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அணி 2 நிமிடம், 59.21 செககன்களில் ஓடி இரண்டாமிடத்தையும் பெற்றன. ஆபிரிக்க அணி 3 நிமிடம், 01.69 செக்கன்களில் ஓடி மூன்றாமிடத்தைப் பெற்றது. ஆசிய அணி 3 நிமிடம் 03.02 செக்கன்களில் ஓடி நான்காமிடத்தையும் பெற்றது.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் ஆபிரிக்காவும், பெண்கள் பிரிவில் ரஷ்யாவும் சம்பியனாகின.

ஆண்கள் பிரிவில் ஆபிரிக்கா 134 புள்ளிகளையும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் 119 புள்ளிகளையும், ஐரோப்பா 115 புள்ளிகளையும் பெற்றன.

ஆபிரிக்க அணி தொடர்ச்சியாக 4 தடவை சம்பியனாகி புதிய சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பிரிவில் ரஷ்யா 126 புள்ளிகளைப் பெற்றது. ஐரோப்பா 123 புள்ளிகளையும், அமெரிக்கா 110 புள்ளிகளையும் பெற்றன.

(ஐ)

## பாக்.அணிக்கு இலகு வெற்றி

நெதர்லாந்து அணியுடனான போட்டியில் பாகிஸ்தான் அணி இலகுவாக வெற்றியீட்டியது. சஹீட் அவ்ரிடி துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் பிரகாசித்தார். நேற்றுமுன்தினம் எஸ்.எஸ்.சி மைதானத்தில் இப்போட்டி நடந்தது.

நாணய சுழற்சியில் நெதர்லாந்து அணித்தலைவர் ரோலன்ட் லெப்.'. ரோங் வென்றார். அதையடுத்து நெதர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50ஓவர்களில் 136 ஓட்டங்களைப் பெற்றது அவ்வணி. 3 வீரர்கள் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர்.

சஹீட் அவ்ரிடி 18ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 16.2ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இம்ரான் நஸீர் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சஹீட் அவ்ரிடி ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும சயீட் அன்வர் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர். இதனால் பாக்.அணி 9 விக்கெட்டுகளால் வென்றது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக அவ்ரிடி தெரிவானார்.

சஹீட் அவ்ரிடி தனது அரைச் சதத்தை 18 பந்து வீச்சுகளில் பெற்றார். ஒருநாள் போட்டிகளில் இரண்டாவது அதிவேக அரைச்சதம் இது.

1996 இல் சிங்கப்பூரில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் இலங்கை வீரர் சனத் ஜயசூரிய 17 பந்து வீச்சுகளில் அரைச்சதம் பெற்றார். (ஐ)

## இன்றைய நிகழ்வுகள்

வலி.வடக்கு,செப்.23

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

★ ஆவரங்கால் நடராசா வித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

★ புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி எதிர் அச்சுவேலி மகா வித்தியாலயம்.

★ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை.

**16 வயதுப் பிரிவு**

★ கோப்பாய் மகாவித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. (எ-86)

● ● ●

யாழ்ப்பாணம்,செப்.23

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் இடம்பெறவுள்ள 16வயதுப் பிரிவினர்களுக்கான ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**நெல்லியடி ம.ம.வில்**

★ கரணவாய் மகா வித்தியாலயம் எதிர் பொன்னம்பலம் வித்தியாலயம்.

★ வேலாயுதம் மகா வித்தி. எதிர் இமையாணன் அ.த.க வித்தியாலயம்.

**ஞானசாரியார் கல்லூரியில்**

★ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி.

★ ஞானசாரியார் கல்லூரி எதிர் வல்வை சிதம்பராக் கல்லூரி.

**திக்கம் மைதானத்தில்**

★ கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை எதிர் நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் விக்னேஸ்வரா கல்லூரி. (ஐ-ரி)

● ● ●

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணி முதல் பாஷையூர் சென்.அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4மணி - வளர்மதி வி.க அணி எதிர் அரியாலை ஐ.வி.க அணி.

★ பிற்பகல் 5.15மணி - சென். அன்ரனீஸ் வி.க'ஏ' அணி எதிர் ரோயல் வி.க அணி. (ஐ-ரி)

### அரையிறுதி ஆட்டம்

கொழும்பு,செப்.23

கொழும்பில் நடைபெற்று வரும் ஐ.ஐ.சி வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஆட இலங்கை, ஆஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய நாட்டு அணிகள் தகுதி பெற்றுள்ளன.

தென்னாபிரிக்கா - இந்தியா இடையிலான அரையிறுதி ஆட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும். இலங்கை - ஆஸ்திரேலியா இடையேயான அரையிறுதி ஆட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும். (ம)

# மக்களையும் புலிகளையும் இணைக்கும் திலீபனின் கனவு இன்று நனவாகிவிட்டது!

## மட்டு. - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

கடந்த 15 வருடங்களுக்கு முன் தியாகி திலீபன் ஊட்டிய உணர்வு, இன்று மக்கள் வேறு புலிகள் வேறு என்ற நிலைமாறி, மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. இப்போராட்டம் வெற்றிபெற மக்கள் தொடர்ந்து தமது பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

நேற்றுமுன்தினம் இரவு வந்தாறுமூலை தியாகிகள் அரங்கில் நடைபெற்ற தியாகி திலீபனின் 15 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசிய புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வந்தாறுமூலை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தீக்குமரன், மட்டு. - அம்பாறை மருத்துவப் பொறுபாளர் வாமணன், மகளிர் அணி பொறுப்பாளர் பானுகா, பொருண்மியப் பொறுப்பாளர் நிசாம், கிராம அபிவிருத்திக் குழுத் தலைவர் துரைராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கௌசல்யன் மேலும் கூறியதாவது:-

இனியும் ஒரு போர் மூழும் என சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அவ்வாறான அச்சம் இனி கொள்ளத் தேவையில்லை. எமது உரிமைகளை மீட்டெடுக்க இப்போது அரசியல் ரீதியான மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இப் போராட்டத்திற்கு வித்திட்டவர் தியாகி திலீபன். அவரது கனவு நனவாவதற்கு அனைத்து மக்களும் போராளிகளுடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்குவதுடன் விடுதலைப் பற்றுணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார்.

புலிகளின் 'இரசிகன் இசைக் குழு' வினரின் இசை நிகழ்ச்சியும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# போர் பாதிப்பு குறித்து விவரம் அறிவதற்காக 20 அமைப்புகளின் பிரதிநிதிகள் வருகை

## நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம்,செப்.23

குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் பார்வையிடவும் யுத்தப் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்காகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து 20 அமைப்புக்களைச் சேர்ந்த 60 பேர் சமாதான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்கு வருகை தந்துள்ளனர்.

சமாதானத்துக்கான பிரஜைகள் குழு, தேசிய சமாதானப் பேரவை, மக்கள் சமாதான முன்னணி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், யுத்தத்திற்கு எதிரான தேசிய பேரவை, இன்போம், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம், ஊவா சமூக அபிவிருத்தி அமைப்பு, வெல்லச விவசாய அமைப்பு,வன்னி கலாசார அமைப்பு, கிறிஸ்தவ மாணவர் அமைப்பு, ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான அமைப்பு, தேவசரண அபிவிருத்தி நிலையம், பெண்கள் அபிவிருத்தி நிலையம், பொல்வித்திகம மனித அபிவிருத்தி அமைப்பு, காலி மனித உரிமைகள் அமைப்பு, கண்டி சமாதான நிலையம், புத்தளம சமாதானக் குழு, உலக அமைதிக்கான பேரவை ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளே இங்கு வருகை தந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர்கள் சாவகச்சேரி, வலி.வடக்கு உட்பட போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்த்தனர். குடாநாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பல தரப்பினரையும் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்தனர்.

நாளை வன்னி செல்லும் இக்குழுவினர் போரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அங்கு பார்வையிடவுள்ளதாகவும் - விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் - தெரிவிககப்பட்டது.

நாங்கள் நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவுகளை யாழ்.குடாநாடு சந்தித்துள்ளது என்பதை எமது இந்தப் பயணத்தின் மூலம் தெரிந்து கொண்டோம். நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே அனைத்து மக்களின் விருப்பமாகும் என்று குழுவில் அங்கம் வகிக்கும்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

(ம)

### தமிழ்த்திறன் போட்டிகள் 29 ஆம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம்,செப்.23

வடக்கு-கிழக்கின் கல்வி மேம்பாடு கருதி மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான தமிழ்த்திறன் போட்டிகள் முன்னர் குறிப்பிட்டபடி எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறமாட்டாது என்றும் -

எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடக்கு-கிழக்கில் உள்ள சகல கல்வி வலயங்களிலும் மேற்படி போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மேற்படி போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (எ)

### கட்டடத் திறப்புவிழா

சுழிபுரம்,செப்.23

தொல்புரம் மத்திய பொக்கணை மைதானத்தில் புதிதாகக் கட்டப்பட்ட முன்பள்ளியின் கட்டடத் திறப்புவிழா இன்று மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்வர். (எ-28)

**குண்டுத் தாக்குதலில் பலியான**

## நாகர்கோவில் மாணவரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

விமானக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவர்களின் 7ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நாகர் கோவில் மகாவித்தியாலய அதிபர் எஸ்.மகேந்திரன் தலைமையில், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

குண்டுவீச்சின் போது உயிர் நீத்த மாணவர்களின் பெற்றோர்கள் கதறி அழுதவண்ணம் தமது பிள்ளைகளின் நினைவாக அங்கு வைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னங்களுக்கு, மாலை அணிவித்து, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள், உறவினர்கள், மாணவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வித்தியாலய ஆசிரியர் வி.நாகநாதன், மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எஸ்.குருகுலசிங்கம், உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் என்.நேசரத்தினம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

பாடசாலை மாணவர்களின் உரைகளும், கவிதை நிகழ்வுகளும் தொடர்ந்து இடம்பெற்றன.

குண்டுவீச்சின் போது உயிர் நீத்த மாணவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி நாகர் கோவில் மகாவித்தியாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 22 மாணவர்கள் பலியானமை தெரிந்ததே. (சு-182)

## மலையகத்துக்கு பல்கலைக்கழகம்

"இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கற்கை நெறிகளை மலையக மாணவர்கள் மேற்கொள்வதற்கு வசதியாக நிரந்தரக் கட்டடம் ஒன்றை அடுத்த ஆண்டில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, மலையகத்துக்கு தனியான பல்கலைக்கழகம் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்."

மலையக மக்கள் முன்னணியின தலைவரும், சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஹற்றன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையத்தை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றினார்

அவர் தொடர்ந்து பேசுகையில -

ஹற்றன் கற்கை நிலையம் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்திருந்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது!

மலையகத்துக்கெனத் தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கையின ஒரு பகுதியாகவே திறந்த பல்கலைக் கழகத்தின் கற்கைநெறி ஆரம்பமாகியுள்ளது.

மலையக அபிவிருத்தியின் ஒரு அம்சமாக கொட்டகலையில் கலாசார நிலையம் ஒன்று அமையவுள்ளது. இதில் நுண்கலை உட்பட பலதரப்பட்ட துறைகளிலும் அபிவிருத்தி காண நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சந்தர்ப்பங்களை நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார்.

வைபவத்தில் கிழக்குப் பல்கலைக் கழக துணைவேந்தர் எம்.எஸ்.மூக்கையா, பேராசிரியர்கள் சோ.சந்திரசேகரன், எஸ்.சின்னத்தம்பி, உமா குமாரசாமி, தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறைப் பணிப்பாளர் டி.தனராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## முன்னாள் ஜனாதிபதி கிளின்டன் இலங்கைக்கு விஜயம் செய்வார்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியில் கிளின்டன் இலங்கை வரவிருக்கிறார். அதற்கான திகதி கூடிய விரைவில் நிர்ணயிக்கப்படும் என்று பிரதமர் ரணிலிடம் அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமெரிக்க விஜயத்தின் போது பில் கிளின்டனை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து மிகுந்த ஆர்வத்துடன் கவனித்து வருவதாகக் குறிப்பிட்ட கிளின்டன் சமாதான முயற்சிகளில் இதுவரை காணப்பட்ட முன்னேற்றம் குறித்து பிரதமர் ரணிலுக்கும், அரசுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தமது முழு ஆதரவையும் வழங்க அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி முன்வந்துள்ளார். (ஐ)

# கல்வி மேம்பாட்டு பேரவை அங்குரார்ப்பணம்



இளம்பரிதி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதையும், தமிழீழ மேம்பாட்டுப் பேரவையின் கொடியை அதன் தலைவர் வண.பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார் ஏற்றுவதையும், தமிழீழ கல்விக்கழகப் பிரமுகர் அருண் மாஸ்டர், யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் ஆகியோர் சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.





நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, அரச அதிபர் க.சண்முகநாதன், அருட்தந்தை பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார், எஸ்.சுந்தரம் டிவகலாலா, இ.சிவானந்தம், எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி., பேராசிரியர் அ.சண்முகதாஸ், துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, த.பஞ்சலிங்கம், அருண் மாஸ்டர் ஆகியோர் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.





அங்குரார்ப்பண நிகழ்வுகளில் கொடி வணக்கம் மற்றும் அகவணக்கம் செலுத்தப்படுவதையும் மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: அற்புதன், வசந்தன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## பாலச்சந்திரன் சஞ்சிகா

மலர்வு 13.03.1995 உதிர்வு 24.08.2002

*கண்ணீரில் கரைகின்றோம்!*
*வெந்நீரில் மிதக்கின்றோம்!*
*மழலை முகம் மாறும் முன்னே*
*சுடலை சென்று விட்டாயோ?*
*சடுதியான உன் இழப்பால்*
*தவித்துப் போய் நிற்கின்றோம்!*
*நினைத்துப் பார்க்கமுடியவில்லை!*
*இறந்துதான் விட்டாயோ?*

நிரந்தர முகவரி: *பொலிகண்டி.*
தற்காலிக முகவரி: *கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (8595)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 - 06 - 1936



உதிர்வு 24 - 08 - 2002

## அமரர் அருளானந்தம் திருமேனி

*பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்*
*எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அணைத்த*
*அன்புத் தந்தை எம்மை விட்டுப்பிரிந்து*
*31 நாள்களல்ல, பல்லாயிரம் நாள்கள் சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு*
*என்றுமே மறையமாட்டாது.*
*உங்கள் பிரிவால் நிலைகுலைந்து உறவு எண்ணி*
*உங்கள் சொந்தங்கள் இங்கே தவிக்கின்றன.*

இறையடியில் உங்களது ஆன்மா சாந்திபெற
விழிநீர் சொரிகின்றோம்.

*சென்.மைக்கேல் ரோ் அருகில்,*
*உரும்பிராய் கிழக்கு*
*உரும்பிராய்.* (8606)

என்றும் உங்கள் நினைவில்
வாடும்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 1926 - 08 - 15



ஆண்டவன் அடியில் 2002 - 08 - 24

பலாலி தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த,

## அமரர் தாமர் சின்னத்தம்பி

*அன்பை யாசித்த எங்களை இந்தப் பிரிவை*
*விட்டுச் சென்றீர்கள் அப்பா? - உங்கள்*
*பிரிவு நிச்சயமானபோது சுவாசக் காற்று*
*நெஞ்சுப் பிழையில் சிக்கிக்கொண்டது!*
*ஓராயிரம் சோகங்கள் மௌன யாத்திரை போக - தினம்*
*கண்ணீர் மழை உங்களையே நினைவூட்டுகிறது*
*யுகம் யுகமாய் நம்மை அடைகாக்க எண்ணிய - உங்கள்*
*நினைவுகள் தேய்நிலவு ஆனாலும்*
*முகம் காத்த நிலையாய் நெஞ்சுக்குள்*
*மந்திரமாய் வைப்போம் உங்கள் அன்பு நினைவுகளோடு....*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்.

*லண்டன்.*
*0044-208-4226432* (8610)

# விசர்நாய்க் கடிக்கு இலக்கான யுவதி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்,செப்.23

ஒருமாத காலத்துக்கு முன்னர் விசர்நாயக் கடிக்கு இலக்காகிய இளம்பெண் ஒருவர் நேற்றுமுன் தினம் மரணமடைந்தார். மானிப்பாய் புளியடியைச் சேர்ந்த பாலசிங்கம் முகுந்தினி (வயது-19) என்ற யுவதியே மரணமானவராவார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் விசர் நாய்க் கடிக்கு இலக்காகிய இப்பெண் தடுப்பூசி மருந்தை ஒழுங்காக ஏற்றத் தவறியதாலேயே உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இப்பெண்ணுக்கு நேற்றுமுன் தினம் திடீரென வலிப்பு ஏற்பட்டதால் யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டதாகவும் -

வரும் வழியில் அவர் மரணம் அடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-139)

# தந்தை செல்வா வாழ்க்கை வரலாறு நூல் வடிவில்

வலி.வடக்கு,செப்.23

தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றை நான்கு தொகுதிகளாக நூல் வடிவில் வெளியிடுவதற்கு வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கையைத் தந்தை செல்வா அறங்காவலர் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே இரண்டு தொகுதிகள் நூலுருவில் வெளிவருவதற்குத் தயார் நிலையில் இருப்பதாகவும் -

மற்றைய இரண்டு தொகுதிகளும் விரைவில் பூர்த்தியடையுமெனவும் -

தந்தை செல்வா உருவச்சிலை திறப்பு விழாவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நூலை வெளியிடுவதில் நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளபோதிலும் வெகுவிரைவில் தந்தையின் வரலாறு ஆர்வலர்களின் உதவியுடன் நூல் வடிவில் வெளிவரவுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய உறுப்பினரும், தந்தை செல்வா அறங்காவற்குழு உறுப்பினருமான சோ.குலநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-86)


## வான் தேவையா?

உங்களது விசேட தேவைகளுக்கு
வான் சேவை உண்டு.
தொடர்பு: 292/4, நாவலர் வீதி,
கைலாசபிள்ளையார் கோயிலடி,
முன்னைய 'உதயன்' பணிமனை லேன்,
யாழ்ப்பாணம். (8625)


# ஆறாம் மாத நினைவலைகள்

மலர்வு 02 - 12 - 1979



உதிர்வு 02 - 04 - 2002

## வில்வக்கிளி விக்னராஜா (தேவா)

*பாசத்தின் பிறப்பிடமே!*
*எங்கள் அன்புச் செல்வமே!*
*நீ எங்களை விட்டுப் பிரிந்தபோதும்*
*எம் நெஞ்சங்கள் உன்னை என்றும்*
*மறவாது நினைத்திருக்கும்.*

எதிர்வரும் (25.09.2002) புதன்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகிறோம்.

நிரந்தர முகவரி: *அண்ணா வீதி பலாலி*
தற்காலிக முகவரி: *186, நாவலர் வீதி*
*யாழ்ப்பாணம்.* (8618)

- அப்பா, அம்மா,
அண்ணா (ராதா), அக்கா,
தங்கைகள், தம்பி.

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 10 - 1925



உதிர்வு 23 - 09 - 2001

## அமரர் இராஜா சேனாதிராஜா

*(ஓய்வுபெற்ற லிகிதர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)*

*மாறாத சோகத்தை எமக்குத்தந்து,*
*மீளாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்ட*
*எம் அன்புத் தெய்வமே!*

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

*"முருகபதி",*
*உடுவில்,*
*சுன்னாகம்.* (8616)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## யாழ்.நகரில் அதிநவீன உபகரணங்கள் மூலம் மருத்துவ பரிசோதனையும் (MEDICAL CHECK UP) வைத்திய ஆலோசனைகளும்

## நோய் வருமுன் காப்போம்! திடீர் மரணத்தைத் தடுப்போம்!!

- உங்களிலுள்ள நோய் அறிகுறிகளான நாட்பட்ட நெஞ்சு நோ, நெஞ்சுப் படபடப்பு, உடற் பருமனும் - உடல் மெலிவும் என்பவற்றுக்கான மருத்துவப் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கப்படும்.
- அகவை 40இற்கு மேற்பட்டவர்கள் தமது உடல்நிலையை எமது மெடிக்கல் செக்கப் (MEDICAL CHECK UP)இற்கு உட்படுத்துவதன் மூலம் ஆரம்பத்திலேயே சில நோய் அறிகுறிகளை இனங்காணுவதால் நீங்கள் சிகிச்சைக்கூடாக மிக நீண்டகாலம் உயிர் வாழலாம்.
- இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளதாகச் சந்தேகிப்பவர்கள் இதனை இலகுவாக எமது MEDICAL CHECK UP ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ளவும் நோயுள்ளவர்கள் எமது மருத்துவப் பரிசோதனையூடாக அதிக பலனை உடல் நலனில் பெறவும் முடியும்.
- வைத்திய பரிசோதனை ஊடாக நோயாளியாகி விடுவேன் என்ற அச்சம் காரணமாகப் பின்னடிப்பவர்கள் பின்னர் அதிகம் வருந்த நேரிடுகின்றது. இதனால் இன்றே எமது MEDICAL CHECK UP ஊடாகச் சிகிச்சையைப் பெற்று உடல் நிலையை உறுதிப்படுத்தி நீண்டகாலம் நோய் பற்றிய பயமின்றி சுகதேகியாக வாழுங்கள்.
- கொழுப்புப் பரிசோதனையை மேற்கொள்வதோடு உணவுக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் வைத்தியப் பரிசோதனைப் பெறுபேறுகளுக்கமைவாக இலவச வைத்திய ஆலோசனைகளும், மேலதிக சிகிச்சைக்காக வைத்திய நிபுணர்களும் ஒழுங்கு செய்யப்படும். (8612)

## SAMPANTHAR MODERN HEALTH CARE

No. 60, ARASADY ROAD (Thaddatheru Junction), JAFFNA.

அசாதாரண உடல் அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல்
மருத்துவ பரிசோதனைகளுக்கூடாக அதிக பயனடையுங்கள்!

உதயன்

# இரட்டை விசுவாசப் போக்குடைய அதிகாரிகளுக்கு பிரதமர் 'சூடு'!

"கடந்த காலங்களின் நாட்டின் பந்தோபஸ்து என்ற பெயரில் பலகோடி ரூபாக்கள் 'கமிஷன்' ஆகச் சூறையாடப்பட்டன."

"அதே பந்தோபஸ்து, பாதுகாப்பு என்ற பெயரில் - மக்களினதும் நாட்டினதும் பெரும் செலவில் - 21ஆம் நூற்றாண்டின் யுத்தம் ஒன்றை - ஓய்வு பெற்ற லெப்டினனன்ட் கேணல் ஒருவர் மூலம் - 18ஆம் நூற்றாண்டு இராணுவ யுக்திகளோடு நடத்தினார்கள்."

- இப்படி உண்மைகளைப் புட்டு வைத்திருப்பவர் வேறுயாருமல்லர் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான்.

இலங்கையில் வைத்து அவர் இதனைக் கூறவில்லை.

நியூயோர்க்கில் ஹோட்டல் வோல்ட்றோப் அஸ்டோரியாவில் தமக்கு அளிக்கப்பட்ட இரவு விருந்துபசாரம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

அங்குள்ள இலங்கை வர்த்தகப் பிரமுகர்கள் இணைந்து அமைத்துள்ள 'ஸ்ரீலங்கா வெஸ்ட்' என்ற அமைப்பு இந்த விருந்துபசாரத்தை நடத்தியது.

நாட்டில் இரட்டை விசுவாசத்துடன் செயற்படும் இராணுவ மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு இந்த உரையின்போது அவர் கடும் எச்சரிக்கையும் விடுத்தார்.

"சமாதானத்துக்கான கடைசிச் சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்த அரசு இப்போது முயன்றுகொண்டிருக்கிறது. இந்தநேரத்தில் இரட்டை விசுவாசத்துடன் நடந்து அந்த முயற்சிகளைக் குழப்ப முயல்பவர்களை நான் பொறுத்துக்கொள்ளமாட்டேன். அரசாங்கத்தின் கொள்கை மற்றும் போக்கைப் பிடிக்காத பொதுத்துறை நிர்வாகிகளும், இராணுவ அதிகாரிகளும் சேவையை விட்டு வெளியேறலாம் அல்லது அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்" - இப்படி எச்சரித்தார் பிரதமர் விக்கிரமசிங்க.

எதிரணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினாலும் ஜே.வி.பியினாலும் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எதிரான திரைமறைவு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஒளிந்திருந்துகொண்டு - மறைவில் - இத்திட்டங்களுக்கு உதவி புரியும், ஒத்துழைக்கும் அரச மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கே பிரதமர் இவ்வாறு கடும் 'சூடு' போட்டதாகக் கருதப்படுகின்றது.

"சமாதானப் பாதை குண்டும் குழியும், தடைகளும் நிறைந்தது என்பதை நாம் அறிவோம். என்றாலும் சமாதானம் என்ற இறுதி இலக்கை நாம் எட்டுவோம். அதில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்கான மக்கள் ஆணையை நான் பெற்றுள்ளேன். அதை நான் நிறைவேற்றியே தீருவேன்" - என்று பிரதமர் உறுதிபடக் கூறியிருக்கின்றார்.

ஒருபுறம் மிகநெருக்கடியுடன் முன்னகரும் சமாதான முயற்சிகள், மறுபுறம் அதைக் குழப்ப முயலும் பேரினவாதிகளின் தீவிரமும், சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக நிற்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையும். இவற்றுக்கு நடுவில் பிரதமர் ரணில் அல்லாடுவது தெளிவாகத் தோற்றுகின்றது.

இந்நிலையில் தாம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு வேட்டுவைக்கமுயலும் அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள்மீது அவர் கோபப்படுவதில் நியாயமிருக்கத்தான் செய்கிறது.

இரட்டை விசுவாச வேடம் போடும் அதிகாரிகள் முழு சமாதான முயற்சிகளுக்குமே குந்தகமாகி விடுகின்றார்கள்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அடிப்படையாக விளங்குவது அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதன் அடிப்படையிலான யுத்த நிறுத்தமும்தான்.

இந்த இரண்டும் மீறப்படும் சம்பவங்களுடன் கடற்படையே அதிகம் தொடர்புபட்டிருக்கின்றது என்பது கடந்தகால நிகழ்வுகளின் வெளிப்பாடு.

எனவே, இரட்டை விசுவாசம் காட்டும் அதிகாரிகள் மீதான நடவடிக்கையை கடற்படையில் இருந்துதான் பிரதமர் ஆரம்பிக்கவேண்டியிருக்கும் எனச்சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழ்மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்
இல்லையெனில் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.
- லெப். கேணல் திலீபன்.



# புலிகள் மீதான தடைநீக்கம் குறித்து வெளிநாடுகளுடன் பேசமாட்டோம்!

## பிரதமர் ரணில் நியூயோர்க்கில் தெரிவிப்பு

நியூயோர்க்,செப்.23

'விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி பிற நாடுகளிடம் கோரமாட்டோம்' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது:-

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முதல் கட்ட சமரசப் பேச்சு தாய்லாந்து நாட்டில் நடத்து முடிந்திருக்கிறது.

ஏற்கனவே பேச்சில் கலந்துகொள்வதற்கு வசதியாக விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசு விலக்கியுள்ளது. இந்தியா உட்பட வெளிநாடுகள் சிலவற்றில் விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. அதை ரத்துச் செய்வது குறித்து பேசுவீர்களா என்று நியூயோர்க்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளிக்கும்போது "விடுதலைப் புலிகள் மீதான தடையை ரத்துச்செய்வதா, கூடாதா என்பதைத் தடை விதித்த நாடுகள்தான் தீர்மானிக்கவேண்டும். இதுபற்றி இந்தியாவுடனோ, அமெரிக்காவுடனோ பேசமாட்டோம்' என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, அரசியல் சுயாட்சி போன்ற உணர்வுபூர்வமான பிரச்சினைகளில் மனிதநேயப் பிரச்சினைகளுக்கு இரு தரப்பினரும் முக்கியத்துவம் அளிப்பார்கள்.

"பேச்சின்போது பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும். விடுதலைப் புலிகளுடன் நடைபெற்று வரும் பேச்சு நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும்.

"மக்களிடம் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்திய பிறகு தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமை பற்றி முடிவு செய்யப்படும்" - என்றார் பிரதமர். (ஓ)

# கல்விச் செயற்பாடுகளை மதவழிபாடு சிதைக்கக்கூடாது!

## குருநகர் பங்குத் தந்தை வலியுறுத்து

பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிதைவடையாத வகையில் அவர்களது பெற்றோர்கள் தலயாத்திரைகளை மேற்கொள்ளவேண்டும் என குருநகர் பங்குத்தந்தை அருட்திரு.அ.பி.ஜெயசேகரம் அடிகள் வலியுறுத்தியுள்ளார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற ஞாயிறு திருப்பலி நிறைவின்போது பக்தர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய அவர் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

"சாட்டி மாதா ஆலய வழிபாடுகள் கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியபோதிலும் அரச ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் கடமைகளுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் அவர்கள் கலந்துகொள்வதற்காக 20 மற்றும் 21ஆம் திகதிகளிலேயே இறுதிவழிபாடுகள் இடம்பெற்றன.

"ஆனால், குருநகர் மக்களில் பலர் தமது பிள்ளைகளின் கற்றல் விடயங்களில் அக்கறை கொள்ளாமல் பாடசாலை நாள்களிலேயே பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு சாட்டி மாதா தேவாலயத்துக்குச் சென்றுவிட்டார்கள்.

"இது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பாதித்தன. மதத்துக்கு மதிப்பளித்து, ஆலய வழிபாடுகளில் கலந்துகொள்ள வேண்டும் என்பது உண்மைதான். ஆனால், எமக்கு கடமையும் முக்கியம். மாணவர்களின் கல்வியும் முக்கியம். மதம் வெறியாக மாற நாம் அனுமதிக்கக்கூடாது" என அவர் தெரிவித்தார். (ஓ-51)

# ஸ்திரமற்ற நிலையில் தொலைபேசிக் கேபிள்

## அரியாலை மக்கள் விசனம்

கொழும்புத்துறை,செப்.23

யாழ்.கண்டி வீதியில் யாழ்.செயலகத்துக்கு அப்பால் அரியாலைப் பகுதியில் தொலைபேசி இணைப்புக்களுக்கான கேபிள்கள் ஸ்திரமற்ற நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில இடங்களில் மின்சார விநியோக கேபிள்களுடன் தொலைபேசிக் கேபிள்கள் உராய்வதாகவும் -

மின்சாரக் கம்பங்களினூடாக தொலைபேசிக் கேபிள்கள் செல்வதைக் காணமுடிவதாகவும் -

அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

வீதியோரங்களில் மிகத் தாழ்வாகக் கிடக்கும் தொலைபேசிக் கேபிள்களால் போக்குவரத்தில் சிரமமேற்படுவதுடன், சில சமயங்களில் விபத்துக்கள் ஏற்படவும் இது காரணமாவதாகவும் கூறப்படுகிறது.

ஆகவே, பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் இப்பகுதியில் தொலைபேசி கேபிள்களை சீராக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-ரி)

# விடுமுறையில் செயலமர்வு: ஆசிரியர் சங்கம் கண்டனம்

மண்டைதீவு,செப்.23

ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதைக் கண்டித்து தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் யாழ்.மாவட்ட உறுப்பினர்களும் கிளைச்சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நடமாடும் சேவையில் வட கிழக்கு மாகாணச் செயலாளரால் அளிக்கப்பட்ட உறுதிமொழியை நடைமுறைப்படுத்தும்படி இத்தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின் பிரதி, மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் -

உலக ஆசிரியர் தினத்தின் பினனரும் இவ்வாறு நடைபெற்றால் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றும் - தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி)

### நாளை

புரட்டாதி 08
செவ்வாய்க்கிழமை
(24.09.2002)
திதி : திருதியை
பின்னிரவு 1.41 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பின்னிரவு: 1.47 வரை
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஒருவருடன் உரையாடாதவன் ஒன்றும் அறியாதவனாக இருப்பான்.

# சுவிற்ஸர்லாந்தில் 'வெல்லும் தமிழ் விழா'

யாழ்ப்பாணம்,செப்.23

சுவிற்ஸர்லாந்தில் அடுத்த மாதம் 5ஆம் திகதி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஏற்பாட்டில் 'வெல்லும் தமிழ் விழா' நடைபெறவிருப்பதாக அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளர் துரை.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்துவாழும் தமிழர்களுக்கு ஈழத்தமிழர்கள் பல்லாண்டுகாலமாக அனுபவித்துவரும் இன்னல்களை உணர்த்துவதும் -

ஈழத்தமிழர்களின் நிம்மதியான வாழ்வுக்காகக் குரல் கொடுக்க உலகத் தமிழர்களை தூண்டுவதும் -

இந்த விழாவின் பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உலகத் தமிழர் கொடி ஏற்றப்பட்டு, உலகத் தமிழர் கீதம் இசைக்கப்படவுள்ளது.

விழாவில் சிறப்பு நிகழ்வாக தமிழ்மணி புலவர்(டிப்ளோமா) பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் இயல், இசை நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# அரச அலுவலகங்களில் தியாகி திலீபன் நினைவுநாள்களில் புலிக்கொடி ஏற்றத் தடையாம்!

வலி.வடக்கு,செப்.23

உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவு நாள்களையொட்டி யாழ்.செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களில் புலிக்கொடி ஏற்ற மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் பொலீஸாரினால் தடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

திலீபனின் நினைவுநாள்களை அனுஷ்டிக்கும் முகமாக கடந்த 15ஆம் திகதிமுதல் யாழ்.குடாநாட்டில் மஞ்சள், சிவப்பு நிறக்கொடிகள் பறக்கவிடப்பட்டு, தியாகி திலீபன் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றின் அலுவலகங்களில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டுள்ளதுடன், தினமும் புலிக்கொடியும் ஏற்றப்பட்டு வந்தது.

ஆயினும், அரச அலுவலகங்களில் புலிக்கொடி ஏற்றப்படுவது சட்டத்துக்கு முரணான செயல் எனக் கூறியே பொலீஸார் நேரடியாக சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று புலிக்கொடிகளை அகற்றும்படி பணித்ததாகக் கூறப்படுகிறது.

ஆயினும்கூட கொடிகள் அகற்றப்பட்ட இடங்களில் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து காணமுடிகிறது. (ஓ-86)

# படைமுகாம்கள் அருகே எச்சரிக்கை அறிவிப்புகள்

வலி.வடக்கு,செப்.23

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம்களின் வெளிப்புறத்தில் "முகாமிற்குள் அத்துமீறிப் பிரவேசிப்பவர்கள் மீது சிறு பலம் பிரயோகிக்கப்படும்" என்றும் அல்லது "முகாமிற்குள் அத்துமீறிப் பிரவேசிப்பவர்களுக்கு சிறு தண்டனை வழங்கப்படும்" என்றும் எச்சரிக்கை அறிவுறுத்தல் பலகைகள் வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

பருத்தித்துறையில் கடந்த 2ஆம் திகதி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவக் காவலரண்கள் சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்தே இந்த எச்சரிக்கைப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, தமது சொந்த வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து முகாம் அமைத்துள்ள படையினர் இத்தகைய அறிவுறுத்தல்கள் மூலம் பயமுறுத்துவதன் காரணம் தமக்குப் புரியவில்லை என்று இடம்பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறுப்பிட்டியின் மைந்தர் ஓய்வுபெற்ற அதிபர்

**உயர்திரு.சபாபதி தங்கராசா**

அவர்கள் 16.09.2002ஆம் திகதி திங்கட்கிழமையன்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றமையையிட்டு இவரை நாம் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் பல சமூகசேவை நிறுவனங்கள், ஆலய நிர்வாகங்களிலுமாக பொதுச்சேவை ஆற்றுபவர். இவர் நீண்ட ஆயுளுடன் இனிதே வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சிறுப்பிட்டி வடக்கு,* திரு.நடராசா குடும்பத்தினர்.
*நீர்வேலி.* (மைத்துனர்) (8584)



## புகைப்படப் பிடிப்பாளர் உடன் தேவை

நவீன புகைப்பட உபகரணங்களைக் கையாளும் திறமையுடைய புகைப்படப் பிடிப்பாளர் உடன்தேவை. அனுபவம் தொடர்பான ஆவணங்களுடன் உடன் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்

**உதயன்**

(C/23925) 361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 26 - 10 - 1942

மறைவு 11 - 09 - 1995

**அமரர் முருகேசு கனகசபை**

*(ஆசிரியர்)*

*ஆண்டுகள் ஏழு சென்றாலும்*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்*
*"அப்பா" என்றழைக்க உறவொன்றில்லையே?*

*கைதடி - நுணாவில், சாவகச்சேரி.* - மனைவி, பிள்ளைகள். (8600)



கூரை அமைப்பில் புதிய அலை

**அன்டன் சுப்பர் ஷெல்ரா**

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை

GUARANTEED

அன்டன் சுப்பர் ஷெல்ரா

அன்டன் சுப்பர் ஷெல்ரா பொருத்துவதற்கு எற்றவை!

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்

சென்ற் அந்தனிஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டட்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

super Shelta

(C/23857)


# பட்டப்பகலில் கூரை பிரித்து திருட்டு!

யாழ்ப்பாணம்,செப்.23

பகல்பொழுதில் பூட்டியிருந்த வீடொன்றின் ஓடுகளைக் கழற்றி வீட்டினுள் இறங்கிய திருடர் உள்ளே மேசைமீது வைக்கப்பட்டிருந்த வானொலிப் பெட்டியையும் மேசை இழுப்பறையினுள் இருந்த மூவாயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் உரும்பிராய் வடக்குப் பகுதியில் ஜனநடமாட்டம் அதிகமான பகுதியிலிருந்த வீடொன்றிலேயே நிகழ்ந்துள்ளது. திருட்டு நடைபெற்ற சமயம் வீட்டு உரிமையாளர்கள் வேலைக்குச் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோலவே கடந்த வாரமும் இப்பகுதியில் அமைந்த வீடொன்றில் பகல்வேளையில் இதேபாணியில் திருட்டு இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (ஒ-69)

# உடுவில் கல்லூரி பரிசளிப்பு விழா

வலி.தெற்கு,செப்.23

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் செல்வி சி.செல்லையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வண.கலாநிதி கே.ஜே. சாமுவேல் அடிகள் தம்பதியினர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கின்றனர்.

(ஒ-152)

# வன்னியிலிருந்து வந்தோருக்கு ஐ.நா.அமைப்பு உதவி

வலி.தெற்கு,செப்.23

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள 200 குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக்கொடுக்க அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இப்பிரதேச செயலர் பிரிவில் இதுவரை ஆயிரத்து 605 குடும்பங்கள் வன்னியில் இருந்துவந்து மீளக்குடியமர்ந்துள்ளனர்.

வன்னியில் இருந்து மீளக்குடியமர வந்துள்ள குடும்பங்களின் சுகாதார நிலையைப் பேணவும், நல்ல குடிதண்ணீர் கிடைக்கவும் என பொதுக்கிணறுகள் பலவற்றை திருத்தியமைத்துக்கொடுக்கவும் மேற்படி ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

மாதகல், சகாயபுரம், பிரான்பற்று போன்ற இடங்களில் உள்ள பல பொதுக்கிணறுகள் திருத்தியமைக்கப் படவுள்ளன. (ஒ-152)

# பொற்பதிவீதி மழைநீர் வடிகால் செப்பனிடப்படுமா?

யாழ்ப்பாணம்,செப்.23

கொக்குவில் பொற்பதி வீதியோரத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைத் தண்ணீர் வடிந்தோடும் மதகு தற்போது தூர்ந்துபோன நிலையில் பற்றைகள் மண்டிக் காணப்படுவதுடன், கழிவுப் பொருள்களாலும் நிரம்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதுமட்டுமன்றி, கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்திற்குச் செல்லும் வீதியின் பால அமைப்பு இடிந்து இந்த மதகின் நீரோட்டத் தொடர்பைத் துண்டித்த நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மழைக்காலம் நெருங்குவதால் இவ்வீதியோர மதகு உடனடியாகச் செப்பனிடப்படவேண்டும் என இப்பகுதி வாசிகள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-69)

# சண்டிலிப்பாயில் கால்நடை குறித்த பராமரிப்புப்பயிற்சி

வலிகாமம் தெற்கு,செப்.23

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் கால்நடை வைத்தியர் அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் பற்றிய பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் கால்நடை வளர்ப்போர் இம்மாதம் 27ஆம் திகதிக்கு முன்பாக தமது பெயர்களைக் காரியாலயத்தில பதிவுசெய்துகொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-152)


**இதோ மகிழ்ச்சிதரும் செய்தி**

**வீடமைப்புக் கடன்களுக்கான**

வட்டி வீதத்தை இப்போது நாங்கள் குறைத்துள்ளோம்.

தேசிய சேமிப்பு வங்கியின் "கே தொற" வீடமைப்புக் கடன் இப்போது குறைந்த வட்டியில் கீழ்வருமாறு வழங்கப்படுகிறது.

| கடன் தொகை | வருடாந்த வட்டி |
|---|---|
| ரூ. 250,000/- வரை | 14% |
| ரூ. 250,000/- முதல் 750,000/- வரை | 15% |
| ரூ. 750,000/- உம் அதற்கு மேலும் | 15.5% |

மேலதிக விபரங்களுக்கு: கடன் வழங்கல் முகாமையாளர், தலைமை அலுவலகம் 573180/075-332439 அல்லது அண்மையிலுள்ள தே.சே.வ. கிளையின் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

NSB

தேசிய சேமிப்பு வங்கி

வீடு வாசல்

# யாருடைய எதிர்பார்ப்புமின்றி வாழும் நிலைக்கு பெண்கள் உயரவேண்டும்

இப்போது எல்லாம் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறிவிட்டார்கள். நாட்டை ஆளுகின்றார்கள். விமானம் செலுத்துகின்றார்கள். யுத்த களத்தில் துப்பாக்கி ஏந்துகின்றார்கள். இந்த உலகில் ஆண்கள் எந்தெந்த துறைகளில் எல்லாம் பிரகாசிக்கின்றார்களோ அதேமாதிரி பெண்களும் அனைத்து துறைகளிலும் தடம் பதித்து சாதனைகள் படைக்கிறார்கள்.

பாரதி கண்ட புதுமைப் பெண் உருவாகிவிட்டால் பாரதியின் கனவு பலித்துவிட்டது என்று மேடை போட்டு பேசினாலும் புத்தகம், பத்திரிகை என்று அச்சில் வெளிவந்தாலும் நடைமுறையில் எதுவுமே சரியாக இல்லை. பெண்ணினம் மிதிக்கப்படுகின்றதே ஒழிய மதிக்கப்படவில்லை. பெண்மை எங்கே போற்றப்படுகின்றது. ஆண் ஆதிக்கத்தால் கால்களில் மிதிக்கப்படுகிறது. பெண்களுக்கு இந்த சமூகத்தில் உள்ள அடக்குமுறைகள் முற்றாக நீங்கிவிட்டனவா? ஆண்களுக்கு சமமாக தலைநிமிர்ந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் நிற்கமுடிகின்றதா? ஆண்களைப் பார்க்கும் அதே கண்நோக்குடன்தானா இந்த சமுதாயம் பெண்ணையும் பார்க்கின்றது? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் ஒரே பதில் "இல்லை" என்பதுதான். காரணம் அடுக்கிக்கொண்டே போகலாம். பெண்கள் படும் இன்னல்களைச் சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் போகலாம். பெண் படிக்கிறாள், பட்டம் பெறுகிறாள், தொழிலுக்குப் போய் சம்பாதிக்கிறாள், சாதனைகள் படைக்கிறாள். ஆனால், ஒவ்வொரு காலகட்டத்திலும், சந்தர்ப்பத்திலும் அவள் துன்பங்களுக்கும், அவமானங்களுக்கும் பல தடைவைகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. படிக்கும் வயதில் ஒரு ஆண்மகன் பின்னால் வந்தாலோ, காதல் வசப்பட்டு அந்தக் காதல் கைகூடாமல்போனாலோ சமுதாயம் அந்தப் பெண்ணை வேறு கண்ணோட்டத்தில்தான் பார்க்கும்; வீண்பழி சுமத்தும். திருமண வாழ்க்கைகூட எட்டாத கனியாகப் போய்விடும். ஆனால்,



இதே நிலையில் ஒரு ஆண் இருந்தால் வேறு ஒரு பெண்ணை நல்ல சீதனம் வாங்கி திருமணம் செய்வார்கள். இதனை சமுதாயம் கண்டு கொள்ளவேமாட்டாது.

ஒரு குடும்ப பொருளாதர நிலைக்காக சொந்தக் காலில் நிற்கவேண்டும் என்பதற்காக பெண்கள் தொழிலுக்குப் போகிறார்கள். அங்கே வேலைத் தளத்தில் சக ஊழியர்கள், மேல் அதிகாரிகளால் ஏற்படும் நெருக்கடிகள், பல ரகமாக இருக்கும். பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றார்கள். ஆணும், பெண்ணும் தொழில் செய்யும் இடத்தில் பேசிப்பழகுவது தவிர்க்கமுடியாத ஒன்று. ஆனால், பெண்கள் எப்போதும் விழிப்பாக இருக்கவேண்டும். ஆண்களுடன் தேவையற்ற பேச்சுக்களை தவிர்ப்பது பிரச்சினை வராமல் தடுக்க நல்லதோர் வழி. மேல் அதிகாரிகள், சக ஊழியர்கள் உங்களை கீழ்த்தரமான எண்ணத்தில் நெருங்கினாலோ, மட்டமான பேச்சுக்களை தொடர்ந்தாலோ இங்கிதமான புன்னகையுடன் தவிர்த்துக்கொள்ளவேண்டும். உங்கள் நடை, உடை, பேச்சினிலேயே அவர்களுக்கு உணர்த்தவேண்டும். கவர்ச்சியான உடை அணிவதைத் தவிர்க்க வேண்டும். "இளைதாக முள்மரம் கொல்க/களையு நர்கை கொல்லும் காழத்த இடத்து" என்றார் வள்ளுவர். முள்மரம் சிறிய கன்றாக இருக்கும் போதே கிள்ளி எறிந்துவிடுங்கள். அது முற்றி பெரிய செடியாகிவிட்டால் அகற்ற நினைப்பவரின் கைகளையே பதம் பார்த்துவிடும் என்பது கருத்து ஆகும். இந்த சமுதாயத்தில் நல்ல ஆண்களும் இல்லாமல் இல்லை. எந்த புற்றில் எந்தப் பாம்பு என்று ஆராயப்போய் ஏன் கயவர்களிடம் மாட்டிக்கொள்ளவேண்டும். ஒரு பெண் தனி யாகவோ, பஸ்ஸிலோ பயணிக்கும்போது மனதாலும் உடலாலும் பாதிக்கப்படுகின்றார்கள். இது ஒரு துரதிர்ஷ்டவசமான விடயம்.

**ஜே.எஸ்.ஹம்ஸத்வனி**

ஒரு பெண் இவ்வளவு பிரச்சினைகளையும் சகித்து வந்தால் திருமணச் சந்தையில் சீதனம் என்ற வலையில் விழுந்து காலம் காலமாக கண்ணீரில் வாழ்க்கையே கரைந்து விடுகின்றது. பணம் இருந்தால் வாழ்க்கை இல்லையென்றால் முதிர் கன்னியாக காலம் தள்ளவேண்டும். சீதனம் கொடுத்து திருமணமானாலும் பின்பு வீட்டுப்பொறுப்புக்கள், பிள்ளைகளைப் பராமரிப்பது எல்லாம் பெண்ணின் பொறுப்பிலேயே விழுகின்றது. இந்நிலை மாறவேண்டும். கணவர்மாரும் வீட்டு வேலைகள், குழந்தையைக் கவனிப்பது போன்ற வேலைகளில் மனைவிமாருக்கு துணையாக இருக்கவேண்டும்.

பெண்கள் தலைகுனிந்து அடங்கி, ஒடுங்கி வாழ்ந்ததுபோதும். ஒவ்வொரு பெண்களும் முதலில் தனது காலில் நிற்கப்பழகவேண்டும். அதற்கு முதல் தேவை கல்வி அறிவு. இதனை சரிவர முறைப்படி கற்றால் தொழில் தானாக வரும். கல்வி போதுமளவு இல்லையென்றாலும் சுயதொழில் செய்து தன்கையில் பணமிருந்தால் யாருடைய எதிர்பார்ப்புமின்றி வாழக் கூடியதாக இருக்கும். பெண் என்றால் ஏளனமாகப் பார்க்கும் சமுதாயத்தை - ஆண்களின் கண்ணோட்டத்தை- மாற்றவேண்டும். எதற்கும் அஞ்சாமல் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்து காட்டவேண்டும். மாமியார் என்று தன் மகனுக்கு சீதனம் வேண்டும் எளிய குணத்தை பெண் மாற்றிகொள்ளவேண்டும்.

அலுவலகத்திலும்சரி, வேறு எந்த இடத்திலும் சரி ஆண்களுடன் பேசிப் பழகும் சந்தர்ப்பம் வந்தால் எல்லோரிடமும் அளவான புன்னகையுடன் அளவுடன் பேசவேண்டும். அளவுமீறி பழக ஆரம்பித்தால் உங்கள் பெயர் கெட்டுவிடும். "முள் சேலையில் விழுந்தாலும் சேலை முள் மேல் விழுந்தாலும் கேடு சேலைக்குத்தான்" என்ற பழமொழியை நினைவில் வைத்திருக்க வேண்டும். சமுதாயத்தில் நெறிவழி தவறாமல் எதிலும் விழிப்பாக அன்புக்கு பணிவும் அடக்குமுறைக்கு சீறியும் எழவேண்டும். எப்போதும் தற்பாதுகாப்பாகவும், கயவர்களைக் கண்டால் விலகியும் வாழவேண்டும். எனவே, பெண்ணை பொன்னாகப் போற்றும்படி ஒவ்வொரு பெண்ணும் சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டவேண்டும். ★

---

காலநடை மருத்துவர் அலுவலகங்களில்

## கோழி நோய்த் தடுப்பு மருந்துகள் போதியளவு உள்ளதாக அறிவிப்பு

வலிகாமம்தெற்கு,செப்.23

யாழ்.மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு கோழிநோய் தடுப்பு மருந்துகள் போதியளவு வந்திருப்பதால், கோழிப்பண்ணையாளர்கள் தனியார் விற்பனை நிலையங்களில் கூடுதல் விலைகொடுத்து அவற்றை வாங்க வேண்டாம் என கால்நடை வைத்தியர் அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில நாள்களாக கோழிகளுக்கான கொள்ளை, ரம்போலா, ரனிக்கற் போன்ற நோய்களுக்குரிய தடை மருந்துகள் கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயங்களில் முடிவடைந்தமையால் தனியார் கடைகளில் கூடுதல் விலை கொடுத்து அவற்றைப் பண்ணையாளர்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கால்நடை வைத்தியர் அலுவலகங்களுக்கு . தற்போது போதியளவு தடை மருந்துகள் கிடைத்துள்ளமையால் மீண்டும் அவற்றின் விநியோகம் நடைபெற்றுவருகிறது.

(ஓ-152)

---

சமாதானத்தின் மீது நம்பிக்கை

## ஆயுதம் தாங்கிய படையினர் மத்தியில் நிராயுதபாணிகளாக நாம் வந்துள்ளோம்!

### கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை

ஆயுதம் ஏந்தியுள்ள நாற்பதாயிரம் இராணுவத்தினருக்கு மத்தியில் நாம் ஆயுதம் ஏந்தாமல் நிராயுதபாணிகளாக வந்துள்ளோம். சமாதானத்தின்மேல் நாம் வைத்துள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையே இவ்வாறான எமது வருகைக்குக் காரணம் எனவே, எமது அமைப்பைப்போல் சமாதானத்தை நேசிக்கும் அமைப்பு வேறு எதுவுமில்லை என்பதை இதிலிருந்து சகலரும் புரிந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ்விழாவின் இரண்டாவது நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்விழாவின் இரண்டாம் நாள் கலைநிகழ்வுகள் திருமறைக் கலாமன்ற அரங்கில் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினரான புதுவை இரத்தினதுரை தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஓர் இனத்தின் முகவரி மொழியில இருந்து ஆரம்பிக்கிறது. மொழியை இழந்தால் வாழ்வு அழிந்துபோகும். தமிழ்மொழியை அழியவிடாது காப்பாற்றுவது எங்கள் அனைவரினதும் கடமையாகும். மூதாதையர்கள் இந்தப் பணியை எம்மிடம் கொடுத்துள்ளனர். நவீன ஊடக வளர்ச்சியினால் எமது தமிழ்மொழி அழிந்துபோகும் என கருதினோம். ஆனால், நவீன ஊடகங்களினுள் புகுந்துள்ள எமது மொழி முன்னேறிச் சென்று இன்று ஆறாவது இடத்தில் முன்னேறியுள்ளது.

நாங்கள் மகிழ்ச்சியாக இருக்குமளவுக்கு தற்போதைய யாழ்ப்பாணத்தின் நிலை இல்லை. தமிழர்களின் கலை, பண்பாடுகள் சிதைவுற்றுள்ளன. நாம் பார்க்கும் காட்சிகளிலும், கேட்கும் செய்திகளிலும் ஒரு நெருடல் காணப்படுகிறது. முன்னொரு காலத்தில் மக்கள் வீதிக்கு வரப் பயப்பட்டார்கள். இன்றும் அத்தகைய நிலையிலேயே மக்கள் வாழ்கின்றார்கள். ஊடகங்கள் செலுத்தும் ஆதிக்கமே இதற்குக் காரணிகளாக உள்ளன. மக்கள் நாள்பூராவும் தொலைக்காட்சிப் பெட்டிகள் முன் இருக்கிறார்கள். அதில் காணும் காட்சிகள் மிகவும் மோசமானவையாக - மக்களது பண்பாட்டை அழிந்துபோகச் செய்வனவாகவுள்ளன. இவை ஆபத்தானவை. இக்காட்சிகள் எம்மை - எமது மக்களை ஏதோ ஒரு திசைக்கு அள்ளிச் செல்கின்றன. இதற்கெதிராக நாம் சிந்திக்கவேண்டும்.

நாங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிட்டோம். கலைகளும் இலக்கியங்களும் எமது விடுதலையைச் சொல்பவையாக இருக்கவேண்டும். போர் போராட்டத்தின் ஓர் அம்சம். சமாதானப் போரின் ஓர் அம்சம். போராட்டத்தின் ஓர் அம்சமான போர் தற்போது தவிர்க்கப்பட்டுள்ளது. எமது விடுதலைக்கான போரில் நாம் 19 ஆயிரம் பேரை சாவு கொடுத்துள்ளோம். போர் அவலம் வேண்டாம். எமது வாழ்வை தீர்மானிக்கும் அளவிற்கு சமாதானம் நிலைக்கவேண்டும். இப்போது நிற்கின்ற இடத்தில் இருந்து சமாதானத்திற்குப் போக வேண்டும்.

எங்களுடைய வாழ்வை நாமே நிர்ணயிக்கும் வகையில் சமாதானம் ஏற்படவேண்டும். நாம் காற்றில் ஏறிப் பறப்பதுபோன்ற சுதந்திரம் எமக்குத் தேவை. எமது மக்கள் வாழ ஒரு பிடி நிலம் தேவை. இவ்வாறே சமாதானம் அமையவேண்டும். எங்களை எங்கள் வழியில் போகவிடுங்கள்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற போது திருமறைக் கலாமன்றம் பேசிய சமாதானம் எமக்குத் தேவை. நாங்கள் இடம்பெயர்ந்து வன்னியில் இருந்தபோது, சமாதானம் தோன்ற வேண்டும் என்பதற்காக மேற்படி மன்றம் நடத்திய கலைப் பயணம் - கலைத்தூதை நாம் அறிவோம். போர் நடைபெற்றபோதும் சமாதானம் ஏற்பட்டுள்ள இக்காலத்திலும்கூட அதனை நிலைநாட்டுவதற்காக, ஒரே நிலையில் நின்று சமாதானத்துக்காகக் குரல் கொடுக்கும் திருமறைக் கலாமன்றத்தின் கலைச்சேவை பாராட்டப்படவேண்டியது.

எமது வேர் பாரம்பரிய கலைகளிலேயே தங்கியுள்ளது. கலையைக் கலை சார்ந்தவர்களாலேயே வளர்க்க முடியும். நிர்வாகிகள், அதிகாரிகள் கலையை வளர்க்கமுடியாது - என்றார்.

(எ-51)

---

புலிகளின் புதிய அணுகுமுறையால்

## இனவாதிகளின் கோஷம் இனிமேல் அடங்கிவிடும்!

### பல்கலை. தொழிற்சங்கக் காப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.23

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியை ஏற்றுக்கொள்ளும் புதிய அணுகுமுறையை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருப்பதாகவும் -

'புலிகள் நாட்டைப் பிரித்துவிடுவார்கள்' என, தென்பகுதியில் பிரசாரம் செய்துவரும் இனவாதிகளின் கோஷம் இதனால் இனிமேல் அடங்கிவிடும் என்றும் -

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் காப்பாளர் ஜே.பி.கரலியத்த நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழத்தில் இடம்பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின்போது தெரிவித்தார்.

சம்மேளனத்தின் மத்திய குழு உறுப்பினர்கள் நடத்திய இம்மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

நடைபெற்று முடிந்த ஆரம்பகட்டப் பேச்சுக்களின்போது சுயநிர்ணயம் தொடர்பாக புலிகள் முன்வைத்த கோரிக்கைகள் நியாயமானவையும், ஏற்றுக்கொள்ளத்தக்கவையும் ஆகும். பேச்சின் இறுதியில் எட்டப்படும் முடிவுகள் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் ஆகிய மூன்று இனங்களினதும் உரிமைகளை சம அளவில் வலியுறுத்துவதாக அமையவேண்டியது அவசியமாகும்.

கடந்தகால யுத்தங்களினால் நாம் அனைவருமே மோசமாகப் பாதிக்கப்பட்டோம் யுத்தத்தை சாட்டாக வைத்து ஆட்சியாளர்கள் நமது தொழிற்சங்க உரிமைகளைக்கூட மறுத்து வந்தார்கள். திறந்த பொருளாதாரம் மற்றும் உலகமயமாக்கல் போன்றன காரணமாகவும் தொழிலாளர் வர்க்கம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சமாதானச் சூழலை மேலும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் எமது உரிமைகளை நாம் ஒன்றிணைந்து வெல்லமுடியும் - என்றார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் லயனல் மல்வத்தகே கூறுகையில்-

தற்போதைய சமாதானச் சூழலிலே, வேறுபட்ட இனங்களான எம்மிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் இங்கு வருகை தந்துள்ளோம். அனைத்து மக்களுமே சமாதானத்துக்காக காத்துக்கிடக்கின்றனர்.

இந்நிலையில் எம்மிடையே இருந்து கொண்டு இனவாதம் பேசும் சுயநல வாதிகளை நாம் தூக்கியெறியவேண்டும் - என்றார்.

அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்க சம்மேளன இணைச் செயலர் என்.ஐ.சி.எச்.பெரேரா கூறுகையில் -

யுத்த சூழ்நிலையில் தடுக்கப்பட்டிருந்த எமது தொழிற்சங்க ரீதியிலான தொடர்புகள் தற்போது மீண்டும் வலுப்பெறுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஒற்றுமை காரணமாக தொழிலாளர் வர்க்க உரிமைகள் இலகுவில் வெல்லப்படக் கூடியதாகவுள்ளன.

பல்கலைக்கழகங்களிடையேயான ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபடுவதாக அறிகிறோம். அதற்கு இடங்கொடுக்காத வகையில் செயற்படுவது எமது கடமையாகும் - என்றார்.

செய்தியாளர் சந்திப்பை அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளன இணைச் செயலர் பி.சுப்பையா நெறிப்படுத்தினார். யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.கலாராஜ் உட்பட பலர் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.(எ-9-ரி)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

YAMAHA GENERATOR ETS 600, CASIO PT20 ELECTRONIC ORGEN JAPAN, SISIL R80 குளிரூட்டும் பெட்டி, 50 சதுர அடி ஸ்பெயின் காப்பெற் என்பன விற்பனைக்கு உண்டு. உமியுடன் வந்தால் கோழி எரு இலவசம். 21, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.(8593)

15 நாள் வளர்ச்சியடைந்த சிவப்பு பிறிமா இன பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. (விலை 65/=) தொடர்பு: திலக், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு. (8603)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (8604)

யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமப் பகுதியில் ஐந்து அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குள்ளது. அல்லது தனியார் நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 18, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (8574)

நல்ல நிலையிலுள்ள 40 ஸ்ரீ HI-ACE VAN, 4ஸ்ரீ தொடரிலக்கமுள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குள்ளது. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.No.: 3529 - 2867 (8546)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.சிவானந்தன், 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8615)

### திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன், பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதல், திருத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301,கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்திக் கருகில் (மேல்மாடி), யாழ்ப்பாணம். (8482)

### தவறிவிட்டது

கைதடிக்கும் நுணாவிலுக்குமிடையில் சாரதி அனுமதிப் பத்திரம், பாரவூர்திச் சங்க அடையாள அட்டை மற்றும் பல ஆவணங்களுடன் எனது பேர்ஸ் 19.09.2002 வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ.நந்தகோபாலன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8619)

திருநெல்வேலி - யாழ்ப்பாணத்துக்கும், யாழ். - முகமாலைக்குமிடையில் கையடக்கத் தொலைபேசி "நோக்கியா" தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: பைனியர் ரெயிலர், No.: 07, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். T.P.No.: 077-519440. சன்மானம் வழங்கப்படும். (8614)

### மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் பணிபுரியும் மணமக்களுக்கு பட்டதாரி மணமக்கள் தேவை. ஸ்பொன்சர் வசதி உண்டு. ஜாதகம், போட்டோ என்பவற்றுடன் 29.09.2002இற்கு முன நேரடியாகத் தொடர்புகொள்ளவும். N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (8479)

**பிரத்தியேக பொருளியல் வகுப்புகள்**

A/L 2003, 2004 பிரிவுகளுக்கான பிரத்தியேக பொருளியல் வகுப்புகள் *கோயில் வீதியில்* நடைபெறுகின்றன.

By: S.A.Rathan B.A.(Hons)

தனியாகவோ, குழுவாகவோ வீடுகளிலும் கற்பிக்கப்படும்.

*மேலதிக தொடர்புகளுக்கு:* T.P.: 21-2222224 (8628)

**தேவை**

☆ பில் கிளாக் (சிங்களம் தெரிந்திருப்பின் முன்னுரிமை)

☆ சமையல் உதவியாளர்

நேரில் தொடர்புகொள்ளவும்:

**ஹோட்டல் றோலெக்ஸ்**

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8626)

# சிறுகைத்தொழில் முயற்சிக்கு கடன் உதவி வழங்கும் திட்டம்

## விரைவில் அறிமுகமாகின்றது

கொழும்பு,செப்.23

சிறிய கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களுக்கான புதிய கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தொழில்விருத்தி அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தொழிலதிபர்களுக்கு கைகொடுக்கும் திட்டமாகவே இது அமையவுள்ளது.

குறைந்த வட்டிவீதத்தில் வழங்கப்படும் இக்கடன் உதவித் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்கவுள்ளது.

தனியார் வங்கிகளின் மூலம் வழங்கப்படவிருக்கும் இந்தக் கடன் திட்டத்திலிருந்து தொழில் அதிபர்கள் 50ஆயிரம் ரூபா தொடக்கம் 3 கோடி ரூபா வரையில் கடனைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-12)

# சில்லறை நாணய பெட்டியால் திருடரிடமிருந்து தப்பிய நகைகள்

## சண்டிலிப்பாயில் சம்பவம்

வலி.தெற்கு,செப்.23

தங்க நகைகள் இருப்பதாகக் கருதி பாரமாக இருந்த பெட்டியை திருடர்கள் களவாடிச் சென்றதால் தங்கநகைகள் தப்பின. திருடர்கள் எடுத்துச்சென்ற பெட்டியில் சில்லறைக் காசுகளே இருந்தன. இச்சம்பவம் சண்டிலிப்பாயில் நடந்துள்ளது.

சண்டிலிப்பாயில் இராசகுலம் என்பவரின் வீட்டினுள் கடந்த வாரம் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெட்டிகளில் பாரமான பெட்டியை எடுத்துச் சென்றனர். ஆனால், அப்பெட்டிக்குள் வீட்டுக்காரர் சேர்த்துவைத்த சில்லறை நாணயங்கள் ஆயிரம் ரூபா அளவில் இருந்தன.

பாரமான பெட்டியை எடுத்துச் சென்ற திருடர்கள் அங்கிருந்த நகைப் பெட்டியை கைவிட்டுச் சென்றனர்.

அதேசமயம் - சண்டிலிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள "மயூரி" மருந்தகத்தின் கதவு உடைக்கப்பட்டு பால்மா வகைகள், ரொபி வகைகள், பிஸ்கட்டுகள், வாசனைத் திரவியங்கள் போன்ற 15ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

அவ்விடத்தில் உள்ள செ.தவராசா என்பவரின் வீட்டில் வீட்டுக்காரர்கள் இல்லாத சமயம் பகல்வேளையில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய தங்க நகைகளும் களவாடப்பட்டுள்ளன.

இக்களவுகள் குறித்து மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-152)

# நன்றி நவிலல்



## அமரர் நடராசா கதிர்காமநாதன்

2002.08.22இல் சிவபதமடைந்த எமது குடும்ப ஒளி விளக்காகிய

நடராசா கதிர்காமநாதன் *(நாதன்)*

*(இளைப்பாறிய பொலிஸ் உதவி அத்தியட்சகர் A.S.P.)*

*அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை, கொழும்பு பொலிஸ் வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் கடமைபுரிந்த டாக்டர்கள், தாதிமார்கள், உதவியாளர்கள் மற்றும் அவருடன் சேர்ந்து கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள், வெளியூர்களில் இருந்து தொலைபேசிமூலமும், தபால்மூலமும், தந்திமூலமும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மலர்வளையங்கள், மாலைகள், கண்ணீர் அஞ்சலிபிரசுரித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதி யாத்திரையில் பங்குபற்றி அணிவகுப்புச் செய்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

வட்டு.கிழக்கு, சித்தன்கேணி. (8541) - குடும்பத்தினர்.

# திலீபன் நினைவு போட்டிகள்: தீவகத்தில் பரிசுபெற்றோர்

மண்டைதீவு,செப்.23

தீவகக் கல்வி வலயத்தில், வடபிராந்திய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் நடந்த திலீபன் நினைவு தினப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பேச்சுப் போட்டியில் உயர்தரப் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் முறையே அ.யோசேப் அனுசன் (நெடுந்தீவு ம.வி.), நிறைஞ்சன் (வேலணை துரைசுவாமி ம.ம.வி.), ப.சர்மிளா (நயினாதீவு ம.வி.) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சாதாரணப் பிரிவில் (தரம் 10-11) முறையே தி.பவிதா (டாக்டர் தியாகராசா ம.வி., காரைநகர்), க.யோகேஸ்வரன் (நெடுந்தீவு ம.வி.), தி.பிரதீபா (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்) ஆகியோர் பரிசு வென்றனர்.

சதுரங்கப் போட்டியில் உயர்தரப் பிரிவில் (12-13) முறையே கு.கோபிநாத் (வேலணை துரைசுவாமி ம.ம.வி.), நா.ரஞ்சித் (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), யோ.தயானி (வேலணை துரைசுவாமி ம.ம.வி.) ஆகியோரும் -

சாதாரணப் பிரிவில் (10-11) சி.இராசகனிஸ்ரன் (நாரந்தனை றோ.க.), அ.அருள்பிரதீபன் (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), தோ.பிரியதர்சன் (நாரந்தனை றோ.க.) ஆகியோரும் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர். (ஓ-ரி)

# அரியாலையில் சட்டவிரோதமான மணல் அகழ்வு

அரியாலைப் பகுதியில் தொடர்ந்து சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. முள்ளிப்பகுதி, ஆத்திக்காடு அம்மன் கோயிலடி பகுதிகளிலேயே சட்டவிரோதமாக மணல் ஏற்றப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்துமாறு பலமுறை அறிவித்த போதிலும் தற்போது இரவுவேளைகளில் மணல் ஏற்றிச்செல்வதை அவதானிக்கமுடிகிறது.

இதனால் பல காணிகளில் ஆழமான பள்ளங்கள் ஏற்பட்டு மழை காலங்களில் குளங்களாக உருவாகும் நிலையும், கடல் நீர் உட்புகுந்து பாதிப்புறும் தன்மையும் ஏற்படும் என பொதுமக்கள் கவலை அடைகின்றனர். (ஓ-ரி)

**Centre for Performing Arts**

Opening Ceremony of

**EMILIANUS COMPUTER CENTRE**

**ECC**

286, Main Street, Jaffna.

23rd September 2002 at 12.00 noon.

*You are most cordially welcome* (C/23927)

**வேத சிவாகம வகுப்புகள்**

இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் தினசரி பிற்பகல் 2.00 மணிக்கு வேத சிவாகம கிரியா வகுப்புகளும் காலை, மாலை விசேஷ வகுப்புகளும் நடைபெறுகின்றன.

29.09.2002 ஞாயிற்றுக்கிழமை காயத்ரீ ஹோமம் நடைபெறும்.

தர்மசாஸ்தா குருகுலம், இணுவில். (8627) - குகஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்.

உ

**ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் அறிவித்தல்**

எமது ஆலயத்திலிருந்து பின்வரும் பொருள்கள் 20.09.2002 வெள்ளிக்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளன.

கிரீடம் - 6, சேவற்கொடி - 1, வேலாயுதம் - 1, சடைநாகம் - 1சோடி, வில்வமாலை - 1, மோகன மாலை - 1, கோவரணம் - 4, கௌரி சங்கமாலை - 1 மற்றும் சாத்துப்படி பொருள்கள்.

(கண்டுபிடித்துத் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)

குறிப்பு:- மேற்கூறப்பட்ட ஆபரணங்கள் நகை வியாபாரிகளிடம் விற்பனைக்கு வரும்போது அவைகளை வாங்காது எமக்கு அறிவிக்குமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

T.P.No: 021- 2222955 (8623) - ஆலய நிர்வாகம்.

*GEM OF INDIA* விருதுபெற்ற கோபால் பற்பொடி

60 வருட காலமாக உங்கள் மத்தியில்




பரிச்சயமுள்ள தரமிகு **கோபால் பற்பொடி**

17 வருட காலத்தின் பின்னர் மீண்டும் ஒறிஜினல் கோபால் பற்பொடி இயந்திரம்மூலம் பொதி செய்யப்பட்டு சரவடிவில் கிடைக்கின்றது.

பல் வலி, பல்லரணை, இரத்தம் வடிதல், வாய் நாற்றம் முதலியவற்றை நீக்கி பற்களுக்கு வெண்மையையும் பலத்தையும் வழங்குகின்றது.

**குபேரன் களஞ்சியம்** 358, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

எனும் ஸ்தாபனத்தை எமது ஏக விநியோகஸ்தர்களாக யாழ். குடாநாட்டில் நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**LANKA GOPAL COMPANY**

பற்கள் பளிச்சிட கோபால் பற்பொடி

LG 8'3, PEOPLES PARK, COLOMBO - 11 T.P: 01- 389119

(8622)

# சாகித்திய மண்டல பரிசு பெறுகின்ற ஆக்கங்கள்

கொழும்பு,செப்.23

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவிருக்கும் சாகித்திய மண்டல பரிசு வழங்கும் வைபவத்தில் பரிசுபெறும் தமிழ் நூல்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு பிரதமர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இலங்கைக் கலைக் கழகத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில இலக்கியக் குழுக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் சாகித்திய மண்டல இலக்கியப் பரிசுபெறும் தமிழ் நூல்களும் அவற்றை ஆக்கியவர்களின் பெயர்களும் வருமாறு:-

ஆய்வுத்துறை - "இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்" பேராசிரியர் சி.பத்மநாதன்.

கவிதை நூல் - "மௌனதேசன்" ரி.எல்.ஜபார்கான்.

சிறுகதை - "வெள்ளை மரம்" அல் அஹமட்.

நாவல் - "பறவைகள்" வே.முருகபூபதி.

நாடகநூல் - "நிதர்சனத்தின் புத்திரர்கள்" கே.கணேசன்.

சிறுவர் இலக்கியம் - "மனதிற்கினிய பாட்டு" ச.அருளானந்தம்.

மொழிகெக் கவிதைகள்" சோ.பத்மநாதன். (ஒ-12)

## இராணுவத்தில் மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது

கொழும்பு,செப்.23

பிரிகேடியர் கே.சீ.ஜயரத்னவை விட குறைந்த தரத்தில் உள்ள இராணுவ அதிகாரி எவருக்கும் சேவை மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதை எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிவரை இடைநிறுத்திவைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

இராணுவத் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த பிரிகேடியர் கே.சீ.ஜயரத்ன மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த முறையீடு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நிகால் ஜயசிங்க மற்றும் கேஹரீபவெல ஆகிய நீதியரசர்களின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் கே.சீ.ஜயரத்ன தனது மனுமூலம் தன்னிலும் பார்க்க சேவை மூப்பில் குறைந்த 15ஆவது பிரதிவாதியான பிரிகேடியர் வ.ரத்தினசபாபதி கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் தற்காலிக மேஜர் ஜெனரலாக இராணுவத் தளபதி பலகல்லவினால் நியமிக்கப்பட்டது சட்டபூர்வமற்றதாகையால், அந்நியமனத்தை ரத்துச்செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

இம்மனுவில் முதலாம், இரண்டாம் பிரதிவாதிகளாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், இராணுவத் தளபதி லயனல் பலகல்லவும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

- என்று அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## கல்விச்சாலைக் காட்சிகள்



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் இடம்பெற்ற பாடசாலையின் இசைக் குழுவின் அணிவகுப்பை படத்தில் காணலாம்.



யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பாளர் செல்வி சற்சொருபவதி நாதன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ-73)

## கூட்டுறவுச்சங்க கிளைக்கடைகள் மீண்டும் திறப்பு

மண்டைதீவு,செப்.23

வேலணைக் கூட்டுறவுச் சங்கத்தில் நீண்டகாலமாக இயங்காத கிளைகள் சில மீளத் திறக்கப்பட்டுள்ளன. அண்மையில் மக்கள் இப்பகுதிகளில் மீளக் குடியேறிவருவதால் பாவனையாளரின் நலன்கருதி இந்தக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் எஸ்.செல்லத்துரை தெரிவித்தார்.

வேலணை விற்பனைக்கிளை, வேலணைத்துறையூர்க் கிளை மற்றும் மண்டைதீவு தெற்குக் கிளை என்பனவே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.

மேலும் மண்கும்பானில் மீளக் குடியேறியோரின் எண்ணிக்கை கணகெடுக்கப்பட்ட பின்னர் அங்கு ஒரு கிளையை திறக்க உத்தேசித் திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-ரி)

## சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு கோருவதில் மக்களுக்கு சிரமம்

தென்மராட்சி,செப்.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப்பம் அனுப்புவதற்கு சிரமங்களை எதிர்நோககுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்திருந்தவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்த அனர்த்தங்களின்போது ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் வைத்திருப்பவர்களின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்த போதிலும், நஷ்டஈட்டு படிவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீட்டினை ஒரே படிவத்தில் விண்ணப்பிக்க முடியாதுள்ளதாகவும் -

ஒரு வீட்டுக்கு மட்டும் விண்ணப்பிக்கலாமென கிராம அலுவலர்களால் தெரிவிக்கப்படுவதாகவும் - அறியவருகிறது. (ஒ-117)

## துப்பாக்கிச் சூடு தொடர்பாக ஆரம்ப விசாரணை

கொழும்பு,செப்.23

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி விசாரணை மேற்கொள்ள சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா தெரிவித்ததாக 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் பற்றி கடந்த 17ஆம் திகதி மாலைவரை எவ்வித தகவலும் தனக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அவர், தற்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஹோட்டலில் அவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

கோட்டை பொலீஸார் தகவல் தருகையில், கடந்த 13ஆம் திகதி ஹோட்டலின் முன்புறக் கண்ணாடிகள் ஒரு கோஷ்டியினரால் சேதப்படுத்தப்பட்டதென்ற தகவலைத் தவிர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி எத்தகவலும் தமக்குக் கிடைக்கவில்லை எனக் கூறினர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கடந்த 17ஆம் திகதிவரை பொலீஸ் நிலையமொன்றிலும் எவ்வித முறைப்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், கடந்த 17ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலீஸ்மா அதிபரைத் தொடர்புகொண்டு இவ்விடயத்தில் உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்டதை அடுத்தே விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றவேளையில் அந்தக் ஹோட்டலில் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியினர் தங்கியிருந்தனர்.

ஆயுதங்களுடன் வெளியிலிருந்து வந்த குழுவொன்று வேறொரு குழு மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

அதன்போது நடிகரொருவர் உயிரிழந்திருக்கக்கூடிய சாத்தியம் உண்டெனப் பேசப்படுவதாகவும் -

இவைதவிர மேலதிக விபரம் எதுவும் கிடைக்கவில்லை எனவும் -

பொலீஸ்மா அதிபர் கூறியதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ)

## தியாகத் திருவுருவே.....



### திலீபமே எங்கள் மூச்சு!

திலீபமே எங்கள் மூச்சு
திசையெலாம் இதுவே பேச்சு
திலீபமே எங்கள் சக்தி
திகழுதே எங்கும் பக்தி.

திலீபனே தீபம் ஆனான்
திண்ணிய எண்ணம் நண்ணி
திலீபமோ என்றும் நின்று
திண்ணமாய் அரசு ஓச்சும்.

பார்த்தீபன் என்ற சொல்லில்
பாரதமே பதை பதைக்கும்
ஆர்த்தெழு காந்தி யத்தை
அனலிலே இட்ட தையா!

திலீபமோ என்றும் வாழும்
தியாகமோ நின்று ஓம்பும்
திலீபனின் வேள்வி சந்த
தீயினில் குளித்தல் செய்வோம்!

தென்நல்லை 'கூத்தாடி'

### உன்கொள்கை வெல்லும்: நன்றாய் தூங்கு

நினைவெல்லாம் உன்னெண்ணம் நிழலாயாட
நிதமெங்கள் கவியுள்ளம் உனையேபாட
உனையன்றி உன்னினத்தின் விடிவிது ஒன்றே
உயர்வென்று உழைத்திட்டாய் திடமாய் நின்று
உனைவென்றாய் இலட்சியத்தில் உறுதிகொண்டு
உயர்ந்தவுன் வேட்கையினால் உணர்த்திநின்றாய்!
வினைமுடித்த வேங்கையாய் விரைந்த திலீபா!
வெஞ்சமது உந்தன் புகழ் மீதும் முகம்
கன்னிகொண்ட பூக்கள் புகழ் மாலை சூட
சுகமான தென்றலிங்கு கவியை பாட
நனைகின்றோம் நிகொண்ட துயரங்களன்று
நாளையுந்தன் கொள்கைவெல்லும், அமைதிகொள்வாய்.

திருவையூர் வி.பராபரன்.

### திலீபத் தீபம்

வஞ்சக நெஞ்சர் வடவரும் அஞ்சிட
நஞ்சின் நயமென நஞ்சுண்ட - பிஞ்சுநகன்போற்
பஞ்சென ஊதினிலே பாரதீர்த் தன்னுயிரைக்
கெஞ்சி பலியாக் குருத்து.

குண்டாற் துளைத்துக் குடலெடுக்க வந்தவரைத்
திண்டாட வைத்ததமிழ்த் தீபமிவன் - கண்ணன்போற்
தன்னுயிர் கொய்து தமிழ்த்தாய்க்கு அர்ச்சித்த
மன்னனிவ னன்றோ மகவு.

கண்ணடிப னொப்பதோர் திண்ணிய நெஞ்சினனாய்
மண்ணினில் விடியலை மாற்றமாய்க் - கொண்டுதன்
கண்ணியங் காத்ததமிழ்க் காவிய நாயகனாய்
மண்ணிலிற் பவனிவரும் மாண்பு.

'அவிருதசன்'

## பனை அபிவிருத்திச் சபையின் கூழ் விலை 10 ரூபா அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.23

பனை அபிவிருத்திச் சபையினால் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற ஒடியற்கூழின் விலை தற்பொழுது 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக மாமிசக் கூழ் 30 ரூபாவாகவும், மரக்கறிக்கூழ் 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வந்தன. தற்பொழுது, மாமிசக்கூழ் 40 ரூபாவாகவும், மரக்கறிக்கூழ் 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் புதன், சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் விற்பனை செய்யப்பட்டுவரும் இக்கூழினைப் பருகுவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் தென்பகுதியிலிருந்து அதிகளவில் யாழ்ப்பாணம் வரும் தென்னிலங்கைவாசிகள் பனை அபிவிருத்திச் சபை தயாரித்து விற்கும் மாமிச மற்றும் மரக்கறிக் கூழை விரும்பி அருந்துவது உண்டாகக் கூறப்படுகிறது. (ஒ-10)

## எம்.பிக்கள் குழு அடுத்த மாதம் யாழ்.விஜயம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேர் அடங்கிய குழுவொன்று அடுத்த மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் குடாநாட்டின் நிலைமையைப் பார்வையிடவுள்ளதுடன், அது தொடர்பான கலந்துரையாடல்களிலும் பங்கேற்கவுள்ளனர். (ஒ-10-8)

# சிங்களவர் நலனுக்காக உருவாக்கிய கல்விக் கொள்கை தமிழர்மீது திணிப்பு!

## கல்விப் பேரவை மாநாட்டில் இளங்குமரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்23

**சிங்கள இனத்தின் நலன்களுக்காக, சிங்களவர்களால் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கை தமிழ் மக்களின்மீது திணிக்கப்படுகிறது.**

**- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்(பேபி).**

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவையை மீள அங்குரார்ப்பணம் செய்யும் மாநாடு நேற்று நல்லூரிலுள்ள யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிபோதே வே.இளங்குமரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

96 ஏப்ரல் 19இன் பின் முதன் முறையாக ஒன்றுகூடுகிறோம்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள், எதிர்கொண்ட தடைகள் பல ஏற்கனவே பல பற்றாக்குறைகளுடன் கல்விப்பணியாற்றிய எமக்கு பற்றாக்குறைகள் கூடியிருக்கின்றன. இருந்ததையும் இழந்திருக்கின்றோம்.

போரினால், இராணுவ நடவடிக்கையினால் கட்டட பௌதிக வளங்களை இழந்திருக்கிறோம். பல பள்ளிக்கட்டடங்களை இன்னும் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களினால் பயன்படுத்தமுடியாமலிருக்கின்றது. எவ்வகையான எதிர்பார்ப்புக்கள், தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு நாம் நமது கல்வியை நிலைநிறுத்தவேண்டும்; வளர்த்தெடுக்க வேண்டும்.

கல்வியின் தேவையையும் சிறப்பையும் நன்குணர்ந்த நாம், கல்வியையே எமது முதன்மையான செல்வமாகக் கருதிச்செயற்பட்டிருக்கின்றோம்.

அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை நோக்கி இன்று உலகம் விரைந்துகொண்டிருக்கிறது. உலகில் பெரும்பாலான நாடுகள் அதற்காக ஆழமான முறையிலே திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. முழுமூச்சாக பல உலக நிறுவனங்கள் உரைத்துக்கொண்டிருக்கின்றன.

இதே இலக்குகளை நோக்கி, செயற்படுகின்றோம் என்று கூறி உலக நாடுகளினதும் உதவி நிறுவனங்களினதும் உதவியைப் பெற்றுவரும் ஸ்ரீலங்கா அரசானது தன் கல்வி அமைச்சினூடாக சிங்களவரின் கல்வியை மட்டும் மேம்படுத்திக்கொண்டு, தமிழரின் கல்வியைத் தாழ்த்திப் பாழ்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

நாட்டிற்கான கல்விக் கொள்கைகளை ஆக்கும் தேசியக் கல்வி ஆணைக்குழுவில் உரிய அளவிலே தமிழர்கள் இல்லை. நீண்டகாலமாகத் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பின்றியே தேசியக் கல்விக் கொள்கையாக்கம், கல்வித்திட்டமிடல், பொதுப் பாடங்களுக்கான பாடத்திட்டம், பாடநூலாக்கம் என்பன நடைபெற்று வருகின்றன.

சிங்கள இனத்தின் நலன்களுக்காக, சிங்களவர்களால் உருவாக்கப்பட்ட கல்விக்கொள்கை தமிழ்மக்களின் மீது திணிக்கப்படுகிறது.

முற்றிலும் வெளிநாட்டு உதவியுடன் மஹரகமவில் அமைக்கப்பட்டு இலங்கையின் உயர்கல்விப் பீடமாக இயங்கிவரும் தேசிய கல்வி நிறுவகம், தேசியக் கல்வித்திட்டம் வகுத்தல், பாடத்திட்டங்களை, பாடநூல்களை உருவாக்குதல், கல்வி அலுவலர்களுக்கான கல்வி நிர்வாகப் பயிற்சிகளையும் ஆசிரியவாண்மையை வளர்ப்பதற்கான கற்பித்தல் உத்திப் பயிற்சிகளையும் அளித்தல் ஆகிய முதன்மையான கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிறுவனத்தின் முதன்மையான தலைமைப்பீடங்களில் தமிழர்கள் பணிப்பாளர்களாகவோ, உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகவோ அமர்த்தப்படுவதில்லை. இது எழுதப்படாத நடைமுறையாக இங்கு கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. 20இற்கும் மேற்பட்ட பணிப்பாளர்களின்கீழ் பலதுறைகள் இருந்தபோதிலும், முற்றிலும் தமிழ் மொழியுடன் தொடர்புடைய தமிழ் மொழி இலக்கியம், சங்கீதம், நடனம் போன்ற பாடங்களுக்கான பாடத் திட்டங்களை ஆக்குவதற்குக்கூட தமிழ்ப் பணிப்பாளர்களையோ, ஆளணியினரையோ தேசியக் கல்வி நிறுவகம் அமர்த்த முன்வரவில்லை. அமர்த்தப்பட்ட ஒருசில தமிழர்களும் வெறும் மொழிபெயர்ப்பாளர்களாகவே அங்கு நடத்தப்பட்டுவருகின்றனர்.

இங்கு வெளியீடுகள் சிங்கள மொழியிலேயே முதலில் வெளியிடப்படுகின்றன. அவற்றிற் சில காலந்தாழ்த்தியே தமிழ்மொழியில் வெளியிடப்படுகின்றன. அவற்றைத் தமிழ்ப் பகுதிகளுக்கு எடுத்துவருவதில் தமிழ்க்கல்வி அலுவலர்களும், ஆசிரியர்களும் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளன. கற்பித்தலுக்கு உதவியான வெளியீடுகளும் பாடத் திட்டங்களும் உரிய காலத்தில் கிடைக்காமல் தேர்வு காலங்களிலேயே தமிழ்ப்பகுதிகளுக்கு வந்துசேருகின்றன.

அங்கு கொடுக்கப்படும் பயிற்சிகளினாலோ அங்கிருந்து காலந் தாழ்த்தி வெளியிடப்படும் தமிழ் வெளியீடுகளினாலோ தமிழ்ப் பகுதியினருக்கு முழுமையான பயன்கிட்டுவதில்லை. அங்கு செல்லும் தமிழ் அலுவலர்களும் ஆசிரியர்களும் பெரும் கெடுபிடிகளுக்குள்ளாக்கப்படுகின்றனர். தமிழர்கள் செல்வதற்குத் தடைசெய்யப்பட்ட பகுதிபோன்று தேசியக் கல்வி நிறுவகம் செயற்பட்டு வருகிறது.

கல்வித் திணைக்கள நிர்வாகத்திலும் தமிழர்களுக்குரிய பங்கு வழங்கப்படவில்லை. கல்வி நிர்வாக சேவை வகுப்பு I,II,III பணி நிலைகளுக்கு நாட்டின் தேவைக்கேற்ப, இன விகிதாசாரத்திற்கேற்ப ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை. தமிழர்களுக்குரிய பல இடங்கள் சிங்களவர்களால் நிரப்பப்பட்டுவிட்டன.

இதனால் சிங்களப் பகுதிகளில் கல்வி நிர்வாக சேவை வகுப்பு Iஐச் சேர்ந்தவர்கள் மாகாண, மாவட்ட கல்விப் பணிப்பாளர்களாக இருந்து வருகின்றபோதிலும் தமிழ்ப்பகுதிகளில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களாக கல்வி நிர்வாக சேவை II, IIIஐச் சேர்ந்தவர்களே இருந்துவருகின்றனர்.

முதலாம், 2ஆம், 3ஆம் வகுப்புக்கான கல்வி நிர்வாக சபை அலுவலர்கள் 336 பேர் தேவையாக இருந்தபோதிலும் ஆக 107 பேர்தான் இருக்கின்றார்கள். ஏற்கனவே, மிகக் குறைந்த அளவில் இருந்த தமிழ்க் கல்வி நிர்வாகசேவை அலுவலர்களில் பலர் ஓய்வுபெற்றுச் சென்றுவிட்ட நிலையில் அவ்விடங்கள் நிரப்பப்படாமையால் கல்வி அலுவலர் பற்றாக்குறை தமிழ்ப் பகுதிக் கல்விச் செயற்பாட்டை மிகப் பெரிய சிக்கலுக்குள்ளாக்கிவிட்டது. - என்றார்.

(ஐ-12-4-ரி)

# பாடசாலைகளை விட்டு படையினர் உடனடியாக வெளியேறவேண்டும்!

## கல்வி மேம்பாட்டுப் பேரவை தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.23

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக குடாநாட்டில் பாடசாலைகளில் தங்கியிருக்கின்ற இராணுவத்தினர் உடனடியாக அவ்விடங்களை விட்டு வெளியேறி அப்பாடசாலைகளை மீண்டும் கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை இவ்வாறு தீர்மானம் எடுத்திருக்கின்றது.

நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்ற தமிழீழ கல்விப் பேரவையின் மாநாட்டின்போது புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் மாநாட்டின் முடிவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ மாணவர்களின் சுதந்திரமான நடமாட்டம், சுதந்திரமான கற்றல் மற்றும் மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தடையாக - அச்சுறுத்தலாக - இருக்கும் படை நிலைகள் அகற்றப்படவேண்டும்.

★ பாடசாலைகளுக்குச் செல்லும் வீதிகள் பல இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. அந்த வீதிகள் திறந்துவிடப்படவேண்டும்.

★ உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருக்கும் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு வசதியாக பாடசாலைச் சுற்றாடலில் இருந்து உயர் பாதுகாப்பு வலயப் பரப்பை பின்தள்ளவேண்டும்.

★ வடக்கு - கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் முகமாக புதிய ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ உலக வங்கி போன்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு குடாநாட்டின் கல்விச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் மாநாட்டில் கலந்துகொண்டவர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றை உரிய முறையில் உடனடியாக நடைமுறைப்படுத்துவதென்றும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

(ஐ-4-ரி)

# சங்கானையில் அடுத்தமாதம் சைவத்திருமுறை விழா

சண்டிலிப்பாய்,செப்.23

சங்கானை கல்விக் கோட்டம் ஏற்பாடு செய்துள்ள சைவத்திருமுறை விழா அடுத்தமாதம் 5ஆம் திகதி பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவை முன்னிட்டு சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களிடையே நீதி நூல் மனனப்போட்டி, திருமுறை ஓதல் போட்டி, பண்ணிசைப் போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி, புராணபடனப் போட்டி, மாலை கட்டுதல் போட்டி, தோரணம் கட்டுதல் போட்டி, கோலம் இடுதல் போட்டி ஆகிய போட்டிகள் உட்பட மற்றும் பல போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்றும் -

விழா நடைபெறும் தினத்தன்று காலையில் பனிப்புலம் முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து திருமுறை ஏட்டுச் சுவடிகள், நான்கு நாயன்மார்களின் திருவுருவப்படங்கள் ஆகியன ஊர்வலமாக விழா மைதானத்திற்கு எடுத்துவரப்படும் என்றும் -

சைவசமய அறிஞர்களின் சொற்பொழிவுகள், பரிசில் வழங்கல் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் -

சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளரும், விழாக்குழுத் தலைவருமான சி.செல்லையா தெரிவித்துள்ளார்.

(எ-135)

## பலசரக்குக் கடையில் நள்ளிரவில் திருட்டு!

நள்ளிரவு வேளையில் பண்டத்தரிப்பு காலையடி இடும்பன் கோவிலுக்கு சமீபமாகவுள்ள பலசரக்குக் கடையொன்றினுள் உட்புகுந்த திருடர்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 20ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடையின் பின்பக்கக் கதவை உடைத்த திருடர்கள், அதனூடாக உள்நுழைந்து இந்த திருட்டை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(எ-135)

## சண்டிலிப்பாய் பகுதியில்

# தொடரும் இரவு நேரத் திருட்டு; நித்திரையின்றி மக்கள் தவிப்பு!

சண்டிலிப்பாய்,செப்.23

சண்டிலிப்பாய் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து மேற்படி பகுதி மக்கள் பதற்றமும் பீதியும் அடைந்துள்ளனர்.

கடந்தவாரம் இரவு வேளையில் சண்டிலிப்பாய் ஐயனார் ஆலயத்தின் குதிரை வாகனம் திருடப்பட்ட சம்பவம், தனியார் மருந்தகம் ஒன்று உடைக்கப்பட்டு மருந்துப்பொருள்கள் திருடப்பட்டமை, ஆசிரியை ஒருவரின் வீட்டில் பகல் வேளையில் 5 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டமை ஆகியன இப்பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்றுள்ளன.

மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் இத்திருட்டுச் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் இதுவரை பொருள்கள் மீட்கப்படவோ அல்லது திருட்டு நபர்கள் கைதுசெய்யப்படவோ இல்லை என்று பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

பல மாதங்களுக்கு முன்னர் சண்டிலிப்பாய், கட்டுடையில் உள்ள விவசாய சம்மேளனத்தின் தலைவர் ஒருவரின் வீட்டில் இரவு வேளையில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான நகைகளும் வீட்டுப்பொருள்களும் திருட்டுப்போனது தெரிந்ததே.

மேற்படி திருட்டுச் சம்பவம் பற்றி மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், இதுவரை திருட்டுப்போன பொருள்கள், கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் - திருடர்கள் இனங்காணப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

(எ-135)

# மருதங்கேணியில் நடமாடும் சேவை

வடமராட்சி கிழக்கில் காலம் தாழ்ந்திய பிறப்புக்களைப் பதிவுசெய்வதற்கான நடமாடும் சேவை அடுத்த மாதம் 9ஆம் திகதி மருதங்கேணியில நடைபெறவுள்ளது.

இதுவரை பிள்ளைகளின் பிறப்புக்களைப் பதிவு செய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறாதவர்கள் பெற்றோர்களின் விவாகப் பதிவுப் பத்திரம், சகோதரர் ஒருவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கிராமசேவை அலுவலர், பாடசாலை அதிபர் ஆகியோரின் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் -

மருதங்கேணியில் தபால் நிலையம் ஒன்றினை புதிதாகத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு யாழ். அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்கின் அரச நிர்வாக அலுவலகங்கள் மருதங்கேணியில் அமைந்துள்ளமையினாலும் - வடமராட்சி கிழக்கில் ஏழு உப தபால் நிலையங்கள் மட்டுமே இயங்கி வருவதினாலும் மருதங்கேணியில் புதிதாக தபால் நிலையத்தினை திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(எ-152)

## அரபாத் அலுவலக முற்றுகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

# இஸ்ரேலிய இராணுவத் தாக்குதலில் ஊடகவியலாளர் உட்பட 4பேர் பலி!

## ஊரடங்கு உத்தரவையும் மீறி பலஸ்தீனர் தொடர் போராட்டம்

லண்டன்,செப்ரெம்பர்23

**பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்துக்கு அடுத்துள்ள கட்டடங்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் தகர்ப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்திய பலஸ்தீனர்கள்மீது இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 4பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் ஒருவர் ஊடகவியலாளர் என்று கூறப்படுகிறது.**

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவில் உள்ள அம் அல் பாஹ்ம் பகுதியில் கடந்தவார ஆரம்பத்தில் இடம்பெற்ற பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலையடுத்து மேற்குக்கரையின் ரமழா நகரில் உள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்தை டாங்கிகள் மற்றும் புல்டோஸர்கள் சகிதம் இஸ்ரேலிய இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர்.

அரபாத்தின் அலுவலகத்துக்குள் பலஸ்தீனத் தீவிரவாதிகள் மறைந்துள்ளதாகவும் -

அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் -

கோரிய இஸ்ரேலிய இராணுவம் அரபாத்தின் அலுவலகத்தைச் சுற்றியுள்ள கட்டடங்களைத் தகர்த்துவருகிறது.

இஸ்ரேலிய இராணுவத்தின் இந்தக் கடும்போக்கைக் கண்டித்து மேற்குக்கரையிலும், காஸாவிலும் உள்ள நகரங்களில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனப் பிரதேசங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் அதனை மீறியே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

நேற்றுமுன்தினம் இரவு அரபாத் தங்கியிருந்த அலுவலகக் கட்டடத்தை இஸ்ரேலியப் படைகள் தகர்த்துவிட்டதாக வதந்திகள் பரவியதை அடுத்து பலஸ்தீனப் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்தன.

இவற்றில் ரமழா நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் - இதில் ஊடகவியலாளர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்ததாகவும் - பலஸ்தீன மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நப்லஸ் மற்றும் துல்க்ராம் நகரங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றியோர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் இந்த நகரங்களில் தலா ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, நேற்றுமுன்தினமிரவு அரபாத்தின் அலுவலகக் கட்டடத்தின் மீது பாரிய விளக்குகள் மூலம் வெளிச்சத்தை பாய்ச்சிய இஸ்ரேலியப் படையினர், ஒலிபெருக்கிகள் மூலம் அலுவலகத்துக்குள் உள்ளவர்களை ஒவ்வொருவராக வெளியே வருமாறு அழைத்தனர். ஆனால், இந்த அழைப்புக்கு பலஸ்தீனர்கள் செவிசாய்க்கவில்லை என்றே கூறப்படுகிறது.


பலஸ்தீனத் தலைவரின் அலுவலகத்துக்கான மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகத்தை இஸ்ரேலியப் படைகள் முற்றாகத் துண்டித்துவிட்டதாகவும் அலுவலகத்தில் இணைக்கப்பட்டிருந்த குளிர்சாதனக் கருவிகளைச் சேதப்படுத்தியுள்ளதாகவும் - இந்த நடவடிக்கைகளின் மூலம் அந்தக் கட்டடத்துக்குள் இருப்பவர்களை அதிக சிரமத்துக்குள்ளாக்க இஸ்ரேல் முயற்சிப்பதாகவும் - பலஸ்தீனத் தரப்பில் கூறப்படுகிறது.

தற்போதைய நிலைமை குறித்து இஸ்ரேலியப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வெய்ஸ்மன் ஷிரி கூறுகையில், 'பலஸ்தீனப் பிரதேசத்தை விட்டு அரபாத் வெளியேறவேண்டும். ஆனால், அவர் மீண்டும் அங்கு திரும்ப அனுமதிக்கப்படமாட்டார். அவருக்கு ஒரு வழிப்பாதை பயணச்சீட்டு மட்டுமே வழங்கப்படும்' என்று கூறியுள்ளார். இஸ்ரேலிய பிரதி அமைச்சரின் கூற்று மேற்காசியாவின் பதற்றநிலை மேலும் அதிகரிக்கும் என்பதைக் காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

(ஓ)



இஸ்ரேலியப் படையினரின் முற்றுகையில் யஸீர் அரபாத்தின் அலுவலகம்.



பாகிஸ்தானில் அமெரிக்கத் தூதரகம் மீது கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஷரீப் என்ற அப்துல்லா என்பவரை முகத்தை மூடி கராச்சி நீதிமன்றத்துக்கு பாகிஸ்தானியப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கொண்டு வந்தபோது எடுத்த படம்.

## சந்திரனில் நடந்த வீரர் வழக்கிலிருந்து தப்பினார்!

லொஸ்ஏஞ்சல்ஸ்,செப்.23

அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங் 1969ஆம் ஆண்டு முதன்முதலில் சந்திரனில் இறங்கினார். அவருடன் சென்றவர்களில் எட்வின் புஷ் ஆல்டிரின் என்பவர் இரண்டாவதாக இறங்கினார். இவருக்கு இப்போது 72 வயதாகிறது.

ஆனால், இந்தச் சம்பவம் பொய்யானது. ரஷ்யாவைவிட விண்வெளிப் பயணப்போட்டியில் தங்கள் கை ஓங்கியிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக அமெரிக்கா நடத்திய போலி நாடகம் இது என்று போர்ட் வின் பீல்ட் சிப்ரெல் (வயது 37) என்பவர் தொலைக்காட்சி செய்திப்படம் தயாரித்து அண்மையில் வெளியிட்டார்.

இந்த நிலையில் பெவர்லி ஹில்ஸ் நகர ஹோட்டல் ஒன்றில் கடந்த 9ஆம் திகதி ஆல்டிரினும், சிப்ரெலும் சந்திக்க நேர்ந்தது. அப்போது ஆல்டிரினை அவர் 'நீங்கள் ஒரு திருடர், பொய்யர், கோழை' என்று திட்டியுள்ளார். இதனால் ஆல்டிரினுக்கும், சிப்ரெலுக்கும் மோதல் ஏற்பட்டது. அப்போது சிப்ரெலை ஆல்டிரின் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து ஆல்டிரின்மீது வழக்குத் தொடர்வதற்காக மாவட்ட சட்டத்தரணிகள் அலுவலகம்மூலம் சிப்ரெல் அனுமதி கேட்டார். ஆனால், மாவட்ட தலைமை வழக்கறிஞர் ரைடின் ஆப் அனுமதி தரவில்லை. சிப்ரெல் காயம் அடைந்ததற்கான ஆதாரம் இல்லை. மேலும் அவர் காயமடைந்ததாகக் கூறி மருத்துவமனையில் சிகிச்சையும் எடுத்துக் கொள்ளவில்லை. தவிர, ஆல்டிரின் இதற்கு முன்பாக எந்தக் கிரிமினல் குற்றத்திலும் ஈடுபடவில்லை எனவே, வழக்குத் தொடர அனுமதிக்கமுடியாது என்று - ரைடின் ஆப் கூறிவிட்டார்.

இதனால் வழக்கு விசாரணையில் இருந்து ஆல்டிரின் தப்பிவிட்டார்.

(ஓ)

## செப்.11 தாக்குதல் குறித்து விசாரிக்க ஆணைக்குழு

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தீவிரவாதிகள் அமெரிக்காவை தாக்கியது குறித்து அமெரிக்க புலனாய்வுத் துறையும், உளவுத்துறையும் விசாரித்து வருகின்றன. ஆனால், விமானத்தைக் கடத்தி கட்டடங்களின் மீது மோதச் செய்த தீவிரவாதிகளில் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் யாரையும் இந்த அமைப்புகள் இதுவரை கைதுசெய்யவில்லை.

இந்த நிலையில் அண்மையில் அமெரிக்க புலனாய்வு மற்றும் உளவுத்துறை அதிகாரிகளிடம் ரகசிய அறையில் விசாரணை நடத்தியபோது அமெரிக்காவை தீவிரவாதிகள் தாக்கப்போவது குறித்து 2 வாரங்களுக்கு முன்பே தகவல் தெரிந்தும், அதன் மீது புலனாய்வுத்துறை சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற திடுக்கிடும் தகவலை அவர்கள் கூறியுள்ளனர்.

'என்றாவது ஒருநாள் யாராவது ஒருவர் சாவார்' என்று ரகசிய உளவாளி தெரிவித்த சங்கேத தகவலைப் புலனாய்வுத்துறை மேலிடம் கண்டுகொள்ளவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து செப்ரெம்பர் 11ஆம் திகதி சம்பவத்தை அமெரிக்க புலனாய்வு மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் விசாரிக்கக் கூடாது. தனி ஆணைக்குழு அமைக்க வேண்டும் என அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. முதலில் இதற்கு புஷ் சம்மதிக்கவில்லை.

இப்போது இதை ஏற்றுக்கொண்டு 'ஆணைக்குழு ஒன்று செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதல் தொடர்பான விஷயங்களை விசாரிக்கும்' என்று புஷ் அறிவித்துள்ளார். (ஓ)

## இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்ட

## ஐவரிக்கோஸ்ட்டுக்கு பிரெஞ்சுப் படையணி

## வெளிநாட்டவரைப் பாதுகாக்க

அபிஜான்,செப்.23

ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட்டில் அதிபர் லோரன்ற் கபோவை பதவி கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டபோதும், அங்கு தொடர்ந்து பதற்ற நிலை நிலவுவதால் பிரான்ஸ் தனது படையணி ஒன்றை அங்கு நேற்றுமுன்தினம் இரவு அனுப்பியுள்ளது.

பிரெஞ்சு காலனி நாடாகவிருந்த ஐவரிகோஸ்ட்டில் உள்ள பிரெஞ்சு நாட்டவர் உட்பட வெளிநாட்டவர்களைப் பாதுகாக்கவே படை அனுப்பப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இராணுவப் புரட்சிக்கு வெளிநாட்டவர் உதவியதாக தகவல்கள் பரவியதையடுத்து அங்கு குடியேறியுள்ளவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்படுவதாகவும் -

அதனையடுத்தே பிரெஞ்சுப் படைகள் அங்கு அனுப்பப்பட்டதாகவும் -

சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

சுமார் நூறுபேரைக் கொண்ட பிரெஞ்சுப் படையணியே ஐவரிகோஸ்ட்டில் தரையிறங்கியுள்ளது.

இதற்கிடையில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அலசேன் ஒட்டாரா பிரெஞ்சு தூதரகத்துக்குள் அடைக்கலம் புகுந்துள்ளதாகவும்-

அவரது வீடு அரசுப் படைகளால் அழிக்கப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஓ)



ஐவரிகோஸ்ட்டில் இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சி ஆதரவாளர் ஒருவரது வீடு தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதைப் படத்தில் காணலாம்.

# முஸ்லிம்களின் அபிலாஷைகள் நிறைவேறும் என்கிறார் ஹக்கீம்!

## பேச்சுக்கள் முழு நம்பிக்கை தருவதாகவும் கூறுகின்றார்

கொழும்பு,செப்.23

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும சமாதானப் பேச்சுக்களின்போது முஸலிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படமாட்டா என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல்துறை, முஸ்லிம் விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுக்காலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் அரசியல்பீட உறுப்பினர்கள் மத்தியிலேயே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பு நேற்று காலை அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்து கொண்டபின் அமைச்சர் ரவூப் ஹக்கீம் முதன்முறையாக முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழு உறுப்பினர்களை நேற்றுச் சந்தித்தார்.

தாய்லாந்து பேச்சுக்களில் நான் அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டபோதும் அதற்கும் அப்பால் முஸ்லிம்களின் பிரதிநிதியாகவே செயற்பட்டேன். அங்கு இடம்பெற்ற பேச்சுக்கள் மிகவும் நம்பிக்கை அளிப்பனவாக இருந்தன - என்று அமைச்சர் தமது கட்சிச் சகாக்களிடம் தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் தமது கட்சியின் பிரதிநிதி ஒருவரும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும் என்று கூறியிருப்பது குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டது.

எனினும், இப்பொழுது தேசிய ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்படுவதால் பெரியளவில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படமாட்டாது எனத்தாம் நம்புவதாக அமைச்சர் ஹக்கீம் அங்கு குறிப்பிட்டார்.

எனினும், இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்கு முன் அப்பேச்சுக்களில் முஸ்லிம்களின் உத்தியோக பூர்வ பிரதிநிதித்துவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்து தாங்கள் பேசவிருப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் சொன்னார்.

புலிகளின் தலைவருடனான சந்திப்பிற்கு முன்னர் தேசிய ஐக்கிய முன்னணி மற்றும் ஏனைய முஸ்லிம் அமைப்புகளுடனும் கலந்துரையாடல்களைத் தாம் நடத்தவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். தனிப்பட்ட முறையில் செல்லாமல் ஒரு குழுவாகவே சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்திக்கத் தாம் விரும்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் அடிதடி: விமானப்படை அதிகாரி,சகோதரர் காயம்!

## வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவரும் மாயம்

கொழும்பு,செப்.23

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்று அதிகாலை இரு குழுவினருக்கு இடையே நடைபெற்ற ஒரு மோதலில் விமானப்படை அதிகாரி ஒருவர் காயமடைந்தார். பின்னர் அவரும் காயமடைந்த அவரது சகோதரர் எனக் கூறப்படும் ஒருவரும்தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

குறிப்பிட்ட ஹோட்டலில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் நடைபெறுவதாக பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. உடனே பொலீஸார் அந்த ஹோட்டலுக்கு விரைந்தனர்.

காயமடைந்த விமானப்படை அதிகாரியும் அவரது சகோதரரும் வேறு இருவரும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நால்வரையும் பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்ற பொலீஸார், காயமடைந்த அதிகாரியையும் அவரது சகோதரரையும் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஆயினும், சில மணிநேரத்தின் பினனர் அவர்கள் இருவரும் அறிவிக்காமலேயே அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர்.

அவர்கள் இருவரிடமும் வாக்குமூலம் பெறப்படாததால் பொலீஸார் அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஏனைய இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருக்கின்றனர். (ஐ)

## வெடிக்காத ஷெல்கள் கண்டெடுப்பு!

தென்மராட்சி,செப்.23

சாவகச்சேரி வடக்கு சோலை அம்மன் கோயிலடிப் பகுதியில் உள்ள காணியொன்றில் வெடிக்காத ஆறு ஷெல்கள் காணப்பட்டன. காணி துப்புரவு செய்யப்பட்டபோது காணிக்குள் அமைக்கப்பட்டிருந்த காவலரணுக்கு அருகில் இந்த ஷெலகள் கண்டுபிடிக்கப்பட்டன.

துப்புரவு செய்தவர்கள் இது குறித்து அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு அறிவித்தலையடுத்து அங்கு வந்த படையினர் அவற்றை எடுத்துச் செனறதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## சாவகச்சேரியில் உணவு அட்டை விநியோகம்

சாவகச்சேரி நகர ஜே/300 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் -

இப்பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள அனைத்து மக்களும், இடம்பெயர்வினால் தற்போது வடமராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் தங்கியுள்ள மக்களும் உடனடியாக பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் -

கிராம அலுவலர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ-117)

## மரண அறிவித்தல்

### மத்தினி ஜோன்ஸ்

நாவற்குழி, ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த மத்தினி ஜோன்ஸ் அவர்கள் நேற்று (22.09.2002) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் இணைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சிலோன்மணி அவர்களின் அன்புக் கணவரும் தம்பிராசா நிர்மலதாவின் அன்புத் தந்தையும் கந்தன் தம்பிராசாவின் மாமனாரும் நிர்மராஜ் (சுரேந்திரன் தயாளினி - மருதம் வாணிபம், விஸ்வமடு), கிர்ணா, கஜனா, கஜனி, கஜேந்து ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.09.2002இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*சாந்தை,*
*பண்டத்தரிப்பு.*

(C/23929)

தகவல்:
தம்பிராசா
*(மருமகன்)*


சுடர் ஒளி

24.09.2002

- புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் அதில் விஞ்சித்தும் மாற்றம் இல்லை. அன்று பிரபா கூறியது என்ன? இன்று பாலா கூறுவது என்ன?
- தாய்லாந்தும் பேச்சில் காய் நகர்த்தல் தடைவிதித்த நாடுகள் இக்கட்டில்
- *வேகமாக மாறிவரும் யாழ்ப்பாணம் போரின்போது பேணிக் காத்தவற்றை சமாதான காலத்தில் இழக்கும் நிலை!*
- வேலியே பயிரை மேய்கிறது; தமிழர் கலாசாரம் சீரழிகிறது - தேரடி
- வவுனியாவைக் கலக்கும் மர்ம மரணங்கள்
- *மட்டக்களப்பில் அதிகரிக்கும் புலிகளைச் சீண்டும் சம்பவங்கள்.*
- மலையக மக்களின் உரிமைகளுக்காக புலிகள் குரல் கொடுப்பர். சந்திரசேகரனிடம் பிரபா உறுதி.
- விடிவுக்காய் உரமான தியாக தீபம் திலீபன்.
- கின்னஸ் கிட்டிணசாமி நகைச்சுவை விருந்து.
- டான்சி நில ஊழல் வழக்கில் ஜெயலலிதா மீது கத்தி.

மற்றும் க்ரைம் டயறி, சேரக்கஸ்லேரவின் உலக சாதனை, அலைகளின் காவியம், சிறுகதை, குறுங்கதை சினிமா, விளையாட்டு உட்பட பல்வேறு அம்சங்கள். (C-23926)

விலை 14/-



# இந்திய அணி வெற்றி!

ஐ.சி.சி சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியை இந்தியா 8 விக்கெட்டுகளால் வென்றது. இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி இத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

இந்திய - இங்கிலாந்து போட்டி நேற்று ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலிரு விக்கெட்டுகளை 7 ஓட்டங்களுக்குள் அவ்வணி இழந்தது. எனினும் இளம் சகலதுறை வீரர் இயன் பிளக்வெல் 68 பந்து வீச்சுக்களில் 82ஓட்டங்களைப் பெற்றார். அவர் விளையாடிய 2ஆவது ஒருநாள் சர்வதேச போட்டி இதுவாகும்.

50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 269 ஓட்டங்களை குவித்தது இங்கிலாந்து அணி.

இப் போட்டியில் வென்றால் மாத்திரமே அரையிறுதிக்குத் தகுதி பெற முடியும் என்பதை உணர்ந்திருந்த இந்திய வீரர்கள் ஆரம்பம் முதலே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர்.

வீரேந்தர் ஷேவாக்கும் அணித் தலைவர் கங்குலியும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 192 ஓட்டங்களைக் குவித்தனர். ஷேவாக் 104 பந்து வீச்சுக்களில் ஒரு சிக்ஸர், 21 பவுண்டரிகள் உட்பட 126 ஓட்டங்களைக் குவித்தார். அவர் தனது சதத்தை 77 பந்து வீச்சுக்களில் பூர்த்தி செய்தார். கங்குலி 109 பந்துவீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 117 ஓட்டங்களைக் குவித்தார். 39.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 271 ஓட்டங்ளைப் பெற்றது இந்திய அணி. ஷேவாக் இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

# ஜனாதிபதி தன் நிலையை மாற்றாவிடில் பொ.ஐ.முன்னணி பிளவுபடும் ஆபத்து!

## ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறுகிறார்

கொழும்பு,செப்.23

அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் 19 ஆவது அரசமைப்புச் சட்ட திருத்தத்தைத் தொடர்ந்து, சுதந்திரக் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. இந்த நிலையில் ஜனாதிபதி தனது நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறியிருக்கிறார்.

இச்சட்டத் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கூட்டங்களில் அரசு மீது சீறிப்பாய்ந்து வருகிறார். தனது கட்சியினரையும் கண்டித்துப் பேசுகிறார்.

ஆனால், அவரது கட்சியினர் சிலரோ அவரது இன்றைய போக்கு குறித்து குறை கூறுகின்றனர். கட்சியின் நலனுக்காக அவர் தனது போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும். என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பொதுத் தேர்தல் நடந்து ஓராண்டின் பின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே சபாநாயகரிடம் எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார்.

இருப்பினும், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த அரசு கொண்டுவந்திருக்கும் அரசமைப்புத் திருத்தத்தை ஆதரிக்கக்கூடாது என்று அவர் தனது எம்.பிக்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்த முரண்பாடான போக்கை கம்பஹா மாவட்ட எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பதவியிருக்கும் அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கும் வரை நாடாளுமனறத்தை கலைக்கப் போவதில்லையென்று உறுதியளித்து ஜனாதிபதி சந்திரிகா சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்துக்கு சட்டவலு அளிக்காவிடின் பொ.ஐ.முன்னணி பிளவுபடும் ஆபத்து இருக்கிறது என்று பெர்னாண்டோ புள்ளே கூறுகிறார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெறுவதை விரும்பாத சுதந்திரக் கட்சி எம்.பிக்கள், சட்டத் திருத்தத்தை ஆதரிக்க முயல்வர் என்றும், கட்சியைக் காக்க புத்திசாலித்தனமாக ஜனாதிபதி நடந்து கொள்வதே அவர் இப்பொழுது செய்யக் கூடிய சிறந்த காரியமாகும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## கொழும்புத்துறையில்
# கூரைகள் சேதமடைந்ததால் மீளக்குடியமர்ந்தோர் சிரமம்

அரியாலை,செப்.23

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மாரிகாலத்தில் பெரும் அசெளகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பெரும்பாலான மக்களின் வீட்டுக் கூரைகள் யுத்த அனர்த்தங்கள் காரணமாக பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் மழைநீர் வீடுகளுள் புகுவது இலகுவாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

மேற்படி பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தற்கலிக இருப்பிட வசதிகள் எதுவும் செய்து கொடுக்காததினால், மக்கள் பலத்த சேதமடைந்த தமது வீடுகளில் பல்வேறு சிரமங்களின மத்தியில் வாழ்ந்து வருகின்றமை குறிபபிடத்தக்கதாகும். (எ-17)

# திலீபன் நினைவாக இன்று உண்ணா நோன்பு

தியாகி திலீபனின் பதினைந்தாம் ஆண்டு நினைவு குறித்த அடையாள உண்ணாவிரதம் இன்று காலை 9 மணியில் இருந்து - மாலை 5 மணிவரை துறைநீலாவணை கிராமத்தில் நடைபெறும். துறைநீலாவணை கிராமிய அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் - பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இன்றைய நிகழ்வில், தியாகி திலீபனின் நினைவுரைகளை புலிகள் அமைப்பின் பாட்டிருப்பு கோட்ட அரசியல் பொறுப்பாளர் டாக்டர் எஸ்.நளன் பிரதேச பொறுப்பாளர்களான கே. யோகநாதன், க.ஜெயசீலன் ஆகியோர் நிகழ்த்துவர். (ம)

# தென்மராட்சியில் 49 கிணறுகள் புனரமைக்கப்படும்

தென்மராட்சி,செப்.23

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த கிணறுகளில் பிரதேச சபைக்குச் சொந்தமான 49 கிணறுகள் 'நிக்கொட்' அமைப்பினால் புனரமைக்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த அனர்த்தங்கள் காரணமாக 4ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிணறுகள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## தீவக லயன்ஸ் கழகம் நடத்திய
# இலவச மருத்துவ முகாமில் 75 பேருக்கு கண்ணாடிகள்

யாழ்ப்பாணம்,செப்.23

தீவக லயன்ஸ் கழக ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வேலணை துறையூரில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 75 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்கு கண்ணாடிகளும் வழங்கபபட்டன.

பொது மருத்துவப் பரிசோதனையில் சுமார் 250க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர். கண்பரிசோதனை செய்யப்பட்டவர்களில் 75 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மருத்துவர்களும், யாழ்பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்களும் இந்த முகாமில் கலந்து கொண்டு சிகிச்சைகளையும் மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கினர். (ம)

# ஹாட்லிக் கல்லூரியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டும் அதிபர் தாக்கப்பட்டார்.

எதிர்பாராத விதமாக திடீரென தாக்குதல் நடத்தப்பட்டதால் பெரும் பீதியடைந்த அதிபர் அலறியபடி வீட்டுக்குள் ஓடிச் சென்று மறைந்து கொண்டார். வீட்டில் இருந்த உறவினர்கள் கதவை இறுக மூடிக்கொண்டு கூக்குரலிட்டனர். அப்போது அந்தக் கும்பல் வீட்டுக்கதவைப் பலமாக உதைத்துத் திறக்கமுயன்றது. ஆனால், அவர்களால் கதவைத் திறக்கமுடியவில்லை.

வீட்டுக்கு வெளியே நின்றவாறு அடாவடித்தனம் புரிந்த கும்பில் இருந்த இருவர் வீட்டின் கூரைமீது ஏறி ஓடுகளைக் கழற்றி அவ்வழியாக வீட்டுக்குள் இறங்கினர். உள்ளே மறைந்து கொண்டிருந்த அதிபரை இழுத்து பலாத்காரமாக வீட்டுக்கு வெளியே கொண்டு செல்ல முயன்றனர். அதிபர் அதற்கு எதிர்ப்புக் காட்டவே வீட்டின் மின் விளக்குகளை அவர்கள் அடித்து நொறுக்கினர். உடைமைகளும் சேதமாக்கப்பட்டன. பின்னர் அதிபரை வெளியே இழுத்துச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏற்றினர். அவரது கண்களைக் கட்டியபின்னர் அவரை புலோலிப் பகுதியில் உள்ள கருகம்பன் மயானத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு வைத்து கொலை செய்யப் போவதாக மிரட்டிய அக்கும்பல் அவரை தடிகள், பொல்லுகளால் தாக்கியது.

இந்தச் சம்பவம் பற்றியோ தங்களைப் பற்றியோ எவருக்கும் எதுவும் சொல்லக்கூடாது என்று அதிபரை அந்தக் கும்பல் எச்சரித்ததாகக் கூறப்படுகிறது.

சிறிது நேரத்தின் பின்னர் அவரை அந்த மயானப் பகுதியிலேயே அநாதரவாக விட்டு விட்டு அக்கும்பல் அங்கிருந்து அகன்று சென்றிருக்கிறது.

உடல் முழுவதும் காயங்களுடன் அதிபர் ஸ்ரீபதி அங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு நடந்து சென்று அங்கு சிகிச்சை பெற்றார்.

சுமார் 17 முதல் 25 வரையான வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களைக் கொண்ட கும்பல் ஒன்றே இந்த அட்டகாசத்தைப் புரிந்ததாக அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளூர் உறுப்பினர்கள் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவருகின்றனர். பொலீஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் யுத்த நிறுத்த கண்காணிப்பாளர் குழு ஆகியவற்றுக்கும் முறையிடப்பட்டுள்ளது.

(ஐ-173-182)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் மதியபரணம்

(முன்னாள் இ.போ.ச. சாரதி)

கற்பகப்பிள்ளையார் கோயலடி, உடுவிலைப் பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மதியபரணம் நேற்று(22.09.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், அன்னலக்சுமியின் அன்புக்கணவரும், கிருஸ்ணகுமார் (fz z d) Dr.கிருஸ்ணவேணி (வசந்தி), உதயகுமார் (உதயன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.K.S.பரம்சோதிநாதரின் மாமனாரும், பிரேந்திரா, தாமரா, துஷாராவின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (23.09.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.* (8632)

தகவல்:
ம.உதயன்(மகன்)
Dr.K.S.பரம்சோதிநாதர்.

## வேலாயுதம் சிவபாதசுந்தரம்

*(ஓய்வூதியர் - வருமானவரித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், Former Accountant-Collective Investments Ltd-Colombo)*

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் சிவபாதசுந்தரம் 22-09-2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - பெற்றிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சதாசிவம், தியாகராசா, சந்திரசேகரம், சண்முகம், சகாதேவன், நாகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற நடராசா - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சாரதா (எழுதுவினைஞர் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - மானிப்பாய்), தர்மசீலன், (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்), சத்தியசீலன், குணசீலன், ஞானசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உருத்திரசம்பவனின் (ஆசிரியர், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-09-2002) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி மத்தி வேலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (8633)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

## கணபதிப்பிள்ளை நடராசா

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

மாதகல் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள் நேற்று (22.09.2002) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற அன்னமுத்து அவர்களின் அன்புக் கணவரும், சண்முகரத்தினம் (கனடா), விஜயலஷ்மி, அன்னராசா (மருந்தகம் - வவுனியா), ஞானலஷ்மி (ஆசிரியை - விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்புலஷ்மி (கனடா), இராமநாதன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), திருத்தணிகாசலம் (டுபாய்) ஆகியோரின் மாமனாரும், செல்லம்மா (ஓய்வூதியர்), சின்னத்தங்கம் (ஓய்வூதியர் - மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேமலதா, மேகலா, பானுமன், வாசுகி, விக்னமோகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-09-2002) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*பிள்ளையார் கோவிலடி,*
*மாதகல்.* (8634)

தகவல்:
ந.அன்னராசா(மகன்)

NEW SCIENCE HALL
JAFFNA
துரித மீட்டல்
வினாவிடை வகுப்பு
✻ உயிரியல் ✻
திரு.கெங்காதரன்
ஆரம்பம்:-25.09.2002
புதன் 6.00p.m.
(வாரத்தில் நான்கு நாள்கள்)
(8630)

கேக் ஐசிங்
நவீன டிசைன்களில் திருமண, பிறந்த நாள் (KEY) வைபவங்களுக்கான கேக் வகைகளும் மற்றும் பல வகையான கேக்குகளும் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்
தொடர்பு:- சி.சிவநேசன்.சியாமளா மில் லேன். மீசாலை வடக்கு, மீசாலை.
(8629)

லஷ்மி இணுவில்.
விக்ரம், கிரன், மனோரமா நடித்த
ஜெமினி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
(8631)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
விஜயகாந் (இருவேடம்), பிரபுதேவா, மீனா, கௌசல்யா நடித்த
வானத்தைப் போல
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(8609)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், சாக்ஷி, கவுண்டமணி நடித்த
வேதம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-23810)

ராஜா யாழ்ப்பாணம்.
24ஆம் திகதிவரை
ரஜனி, மனிஷா, கவுண்டமணி நடித்த
பாபா
காட்சிகள்:10.30, 2.30, 6.00
(C-23396)

Uduvil Girls' College
Announces its Prize Day
on
Tuesday the Twenty Fourth of September, 2002
at
3.30 p.m. in the College Hall
Chief Guests
The Most Rev.Dr.K.J.Samuel
Moderator of the Synod, C.S.J.
and
Mrs.A.Samuel.
We Cordially invite
Alumni Parents and Friends
Principal, Staff and Students.
(C/23930)

## கிளிநொச்சியில் உள்ள நான்கு பாடசாலைகளுக்கு 'ஜெனரேற்றர்' வாங்க நிதி

யாழ்ப்பாணம்,செப்.23

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளுக்கு மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலா ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள முன்னணிப் பாடசாலைகளான கிளிநொச்சி மத்திய கல்லூரி, புனித திரேசா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம்,கிளிநொச்சி முருகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கென அரச நிறுவனங்களால் வழங்கப்பட்ட கணனிகளும், போட்டோப் பிரதி இயந்திரங்களும் மின்சார வசதி இன்மையால் நீண்டகாலமாக பாவிக்கப்படாதிருந்தன என்றும் கூறப்பட்டது.

அண்மையில் மேற்படி பாடசாலைகளுக்கு நேரடி விஜயம் மேற்கொண்ட போது இக்குறைபாடுகளை அப்பாடசாலைச் சமூகத்தினர் எடுத்துக் கூறினர் என்றும் -

இதனை அடுத்தே மின் பிறப்பாக்கிகளை வழங்க முடிவு செய்யப்பட்டது என்றும் சிவாஜிலிங்கம் எம்.பி தெரிவித்தார்.

(எ-ரி-4)

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.23

தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற சமாதான பேச்சுக்களின் முதற் கட்டம் குறித்து ஜனாதிபதிக்கு எந்த வித உத்தியோகபூர்வ அறிக்கையும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அரசுக்கு விடுத்த வேண்டுகோளிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்தில் இடம்பெற்ற பேச்சுக்களில் முன்னேற்றம் குறித்து உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி அறிய முடியவில்லை. ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையிலேயே அவர் அதனை தெரிந்து கொள்ள முடிந்தது. எனவே உடனடியாக பேச்சுகுறித்த விவரத்தை ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.



நியூயோர்க்கில் இலங்கை மற்றும் அமெரிக்க வர்த்தகர்களின் மத்தியில் உரைநிகழ்த்தும் பிரதமர் ரணில்.

# இரண்டாம் கட்டப் பேச்சுக்கும் இடமளிக்க தாய்லாந்து தயார்

## அந்நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

பாங்கொக்,செப்.23

இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களின் இரண்டாம் சுற்றை தாய்லாந்தில் நடத்துவதற்கு அனுமதி அளிக்கத் தான் தயார் என்று தாய்லாந்தின் பிரதமர் தக்சின் சின்வட்ரா தெரிவித்துள்ளார்.

முதல் கட்டப் பேச்சு திருப்திகரமாக அமைந்திருந்ததை அடுத்து இரண்டாம் கட்ட நேரடிப் பேச்சுக்கான தளமாக தாய்லாந்தை இருதரப்புக்களும் பயன்படுத்துவதைத் தான் பெரிதும் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களை தாய்லாந்தில் வைத்துக்கொள்வது குறித்து அனுசரணையாளரான நோர்வேயுடன், ஆசிய - ஐரோப்பிய உச்சி மாநாடு டென்மார்க்கில் நடைபெறும் போது தான் கலந்துரையாடவுள்ளதாகவும் 'பாங்கொக் போஸ்ட்' பத்திரிகைக்கு அவர் கூறியுள்ளார்.

"தாய்லாந்து நடுநிலையான நாடு. இலங்கை இனப்பிரச்சினையில் ஈடுபட்டுள்ள இருதரப்புடனும் அதற்கு கருத்து வேறுபாடு இல்லை. இங்கு நடைபெறும் பேச்சு மூலம் இலங்கைக்கும் தென்னாசியாவுக்கும் அமைதி கிடைக்குமானால் தாய்லாந்து அடுத்த சுற்றுப் பேச்சுக்கும் இடமளிக்கத் தயார்" - என்றார் அவர்.


RAMCO CEMENT

ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது. உறுதியான, நீடித்து உழைக்கும் வானுயர்ந்த கட்டடங்களுக்கு கோபுர சின்னம் பொறித்த ராம்கோ RAMCO சிமெந்து.

யாழ்நகரில் ஏக விநியோகஸ்தர்கள்:

ஈஸ்வர பகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2350.

தேவையானோர் உடன் தொடர்புகொள்ளவும். முற்பதிவு செய்தோருக்கு விநியோகம் இலவசம்.

தரமிகு CEMENT RAMCO CEMENT

(C/23928)


## கல்வி மேம்பாட்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாதனும், பொருளாளராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கி னேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்பேரவையின் நிர்வாக குழு உறுப்பினராகளாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரட்ணம், வலிகாமம் வலய உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், யாழ்.பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் சபா ஜெயராஜா, உயர்பட்ட படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர் சதாசிவ மூர்த்தி, யாழ்.தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ். பல கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.பரணீதரன், யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, தொழில்நுட்பக் கல்லூரிகளின் வலயம் நான்கின் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் செ.யோகராஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-4-ரி)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே இந்த விருப்பத்தை அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு சர்வதேச மனிதாபிமான உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் ஆமிரேஜ் தெரிவித்தார்.

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட, அமெரிக்காவுக்கு உத்தியோக பூர்வமாக எடுத்துக் கூறிய பின்னரே அமெரிக்கா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம)


பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க

புதிய கட்டடம் திறப்பு விழா

எமது சங்கத்தின் நடுவப் பணியகம், களஞ்சியம், லொறிதரிப்பிடம் என்பன எதிர்வரும் 25.09.2002ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு

திரு.சி.வி.கே.சிவஞானம் தலைவர் அவர்களால்

(யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்)

திறந்து வைக்கப்படவுள்ளது. சங்க அங்கத்தவர்கள், பொதுமக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

பணிப்பாளர்களும்
பணியாளர்களும்
பருத்தித்துறை பல நோ.கூ.சங்கம்.

(சி-23788)



நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
A/L DAY 2003
கம்பனி முடிவுக்கணக்கு
BY:B.முகுந்தன்
ஆரம்பம்:-
24.09.2002
செவ்.3.00p.m
(8624)



இரசாயனவியல்
A/L 2003
வகுப்புகள்
ஆரம்பம்: 24.09.2002
செவ்.8.00 a.m.
திரு.N.மகேஸ்வரன்
NIRU TUITION CENTRE
KONDAVIL (8617)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.